ISSN 1391-9504

# Vijey விஜய் விஜய்

29.12.2010 - மலர் 07, இதழ் 43

# இனிய புதுவருட வாழ்த்துக்கள் 2011

## பாடசாலைகளில் விழிப்புக் குழுக்கள்

## உலகில் ஆரம்பகால விமான சேவைகள்

## இலங்கையில் மீன்பிடித் தொழில்

விலை ரூபா 15/-

விஜய்
Bata
B.first
SCHOOL SHOES
ரூ. 3 லட்சம் மதிப்புள்ள பண வவுச்சர்களை வெல்வதற்கும், 10% விலைக் கழிவைப் பெறவும் ஓர் அரிய சந்தர்ப்பம்

விபரம் 9 ஆம் பக்கத்தில்...

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசுரிமை

அன்று கண்டி இராச்சியத்தின் மன்னனாகத் தெரிவு செய்யப்படுபவர் குறித்து மக்களின் விருப்பத்தை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மூலமாகவே வெளிப்படுத்தினர். சிலவேளைகளில் மன்னரால் அவரின் கிட்டிய உறவினர் ஒருவரே, அமைச்சர்களின் ஆலோசனையின் பேரில் தெரிவு செய்யப்படுவர். இந்த முறையின்படி எது எப்படி, இருந்தபொழுதிலும் தெரிவு செய்யப்படுபவர் மன்னனின் இரத்த உறவுள்ள உறவினர் ஒருவராக இருப்பது கட்டாயமானதாகும். இதனை நீண்ட காலமாகப் பின்பற்றி வந்தனர்.

எனினும், நாயக்கர்கள் இந்த சம்பிரதாயத்தை மாற்றி அமைத்தனர். அவர்களின் முறையின்படி, மன்னன் மரணமடைந்தால் அதன்பின்னர் உரிய அரசுரிமையாளர் ஒருவர் இல்லாதவிடத்து அரசியின் சகோதரனுக்கு அரசுரிமையைப் பெற முடியும் என்பதே அவர்களின் வழக்கமாக இருந்தது.

மலையக இராச்சியத்தின் சிங்காசனமானது ஸ்ரீ விஜய இளவரசனுக்கு உரித்தானது. அதற்கு மற்றுமொரு காரணமும் இருந்தது. நரேந்திரசிங்க மன்னன் இறப்பதற்கு முன் அரசுரிமைக்கு தகுதி வாய்ந்த இரத்த உறவுள்ள உறவினர் ஒருவரைத் தெரிவு செய்யவில்லை.

அதனால், வேறு ஒருவருக்கு அரசாளும் உரிமை கிடைக்கும் வாய்ப்பைப் பெறக்கூடியதாக இருந்தது. அவர் ஸ்ரீ விஜய இராஜசிங்கன் என்ற பெயரில் அரசனாக முடி சூட்டப்பட்டார். இந்த மன்னனும் நாயக்க வம்ச இளவரசி ஒருவரையே தனது துணைவியாக்கினார். அரசியின் தந்தையார் மன்னனின் பிரதான ஆலோசகராகினார். ஏனையோர் சகல கௌரவமிக்க பதவிகளையும் வகித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவரவியல் பூங்காக்களில் பொலிதீனுக்குத் தடை

## ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து அமுல்

நாட்டிலுள்ள சகல தாவரவியல் பூங்காக்களுக்கும் பொலிதீன் பைகள், மேலுறைகளை எடுத்துச் செல்வதற்கு எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து முற்றாகத் தடை விதிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இதற்கமைய; பேராதனை, ஹக்கலை, ஹெனரத்கொட உட்பட சகல தாவரவியல் பூங்காக்களிலும் இச்சட்டம் அமுல்படுத்தப்படும் என தாவரவியல் பூங்கா பணிப்பாளர் நாயகம் கலாநிதி சிறில் விஜேசுந்தர தெரிவித்துள்ளார்.

அதிக பொலிதீன் பாவனையினால் தாவரவியல் பூங்காக்கள் பாரிய சூழல் நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருவதனாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் பேராதனை தாவரவியல் பூங்காவில் மட்டும் தினமும் 3 ட்ரெக்டர் பொலிதீன் அடங்கிய குப்பைகளை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொலிதீன் மேலுறைகள் மட்டுமன்றி, பொலிதீனால் சுற்றிக்கட்டப்பட்ட உணவுப் பொதிகளையும் எடுத்து வருவதற்கு இனிவரும் காலங்களில் தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக வாழையிலையில் சுற்றிக்கட்டப்பட்ட உணவுப் பொதிகளை எடுத்து வருமாறு தாவரவியல் பூங்கா அதிகாரிகள் பொதுமக்களைக் கோரியுள்ளனர்.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கு ஜனவரியில் அனுமதிப்பத்திரம்



பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்ற சகல வாகனங்களுக்கும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து விசேட அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கை மேல்மாகாணத்திலேயே முதலில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேற்படி விசேட அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதானது பாடசாலைப் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற சகல வாகனங்களுக்கும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களில் மாணவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளைத் தடுக்கும் நோக்குடனேயே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவர் அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி.....)

**கெப்ஸ்களை (Caps) வெற்றியீட்டியோர்:**

01. எம்.எச்.முஹம்மட் இல்ஹாம், 30, சதுகங்கவத்த, களுதாவளை, மாத்தளை.
02. முஹம்மட் ஷிஃபான், 89, புத்தளம் வீதி, நிகவெரட்டிய.
03. அய்மா நிஃமத்துல்லா, 241, காரியப்பர் வீதி, மருதமுனை-05.
04. ஃபாத்திமா ஜுமானா, 84/1, வரகன்தெனிய, முருதகஹமுல்ல.
05. பாண்டியன் நதீகா, 306A, பிரதான வீதி, நீர்கொழும்பு.
06. சுமையா ரிஸ்வி, 194/A, பழைய வீதி, பேருவளை.
07. சல்ஹா பர்வீன், 1/D/73 எகமத்துபுர, கதுரணவத்த, கொழும்பு-15.
08. விஜிதன் குருசாந், கல்குடா வீதி, வாழைச்சேனை.
09. முஹம்மட் அஷ்கான், C21, வாடியத்தன்னை, ஹெம்மாதகம.
10. பாத்திமா நஜிதா இக்பால், 75/11, அப்துல் ஹமீத் வீதி, கொழும்பு-12.
11. ச.சஞ்ஜெயன், 460/1, திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை.
12. எம்.எம்.எம்.மிஃப்ராஸ், 28/7C, டெரன்ஸ் என் டி சில்வா மாவத்தை, கொலன்னாவை.
13. எஸ்.சம்சத் பேகம், க்ரேவல் வளைவு, இரத்தினபுரி வீதி, றக்வான.
14. ஜே.ஷிஃபாக், அந்-நூர்புர, பானகமுவ.
15. ச.கிரிஷாணன், U.D.7, ஸ்ரீ தர்மாராம வீதி, கொழும்பு-9.
16. இ.நிரோஜன், மே/பா வேல்முருகு, தும்பளை வீதி, பருத்தித்துறை.
17. ரா.கோகிலவாணி, இலந்தைக்குளம், நானாட்டான், மன்னார்.
18. எச்.எம்.அஸ்லம், இல.193, ஹங்காணியார் வீதி, ஓட்டமாவடி-01.
19. பி.மதுரிஜா, 47, புகையிரத வீதி, கொட்டகலை.
20. அபிஷேக் ஷவோம், 34/04, ஹேகித்த வீதி, வத்தளை.
21. நுஸ்ரா நவ்ஃபர், 53/2, கிரிங்கதெனிய, மாவனல்லை.
22. சுதாகரன் டிலோஷனி, ஆலையடிவேம்பு வீதி, அக்கரைப்பற்று-07.
23. சண்முகரத்தினம் சிவகாந்தன், 174, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
24. எம்.ஐ.எம்.ஷிஃபான், 3, கம்பளை வத்த, கம்பளை.
25. ஏ.எம்.எப்.ருஸ்னா, 14, போப்பிடிய பசார், தெல்தோட்டை.
26. ரஷீட் அஹமட், 411/1, மதுகம வீதி, சீனவத்த, அளுத்கம.
27. இ.லஜிதாசினி, 251, கெந்தகொல்ல, மாத்தளை.
28. தே.விதுஷா, 192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
29. இ.யூடின் திவியா, செட்டியார் தெரு, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
30. பாத்திமா ரிஸ்மா, 412, சிலாபம் வீதி, பெரியமுல்லை, நீர்கொழும்பு.
31. த.கேம்டியா, பெரியவிளான், இளவாலை, யாழ்ப்பாணம்.
32. எம்.என்.எஃப்.சஸ்னா, 511/1, இனிகல, கட்டுகஸ்தொட்ட.
33. ஜெ.ஆரூரன், 72/1, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில்.
34. அ.சுவன்ஞா, தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.
35. ஆர்.நிலுக்ஷி, 22, ரட்ணகிரி கொலனி, பாமஸ்டன், லிந்துல.
36. எம்.வித்யாசினி, A/29 ரொசிட்டா எஸ்டேட், கொட்டகலை.
37. எம்.எஸ்.அப்துர் ரஹ்மான், 190/B, மீவலதெனிய, ஹந்தஸ்ஸ.

*(மிகுதி அடுத்த வாரம்)*

# 28 வருடங்களின் பின்னர் பிறந்த ஒரங்குடான்

அண்மையில் தெஹிவளை விலங்கினக்காட்சிசாலையில் பிறந்த ஒரங்குடான் குட்டியை கடந்த 16 ஆம் திகதியிலிருந்து பொதுமக்கள் பார்வையிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பாடசாலை விடுமுறை தினங்களில் இதனைப் பார்வையிட வரும் சிறுவர்களுக்காக, தெஹிவளை விலங்கினக் காட்சிசாலையில் பல புதிய நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக விலங்கினக் காட்சிசாலை பணிப்பாளர் சேனக குணரட்ன தெரிவித்துள்ளார்.



28 வருடங்களின் பின்னர் தெஹிவளை விலங்கினக்காட்சிசாலையில் பிறந்த முதலாவது ஒரங்குடான் குட்டி இதுவாகும். இந்த ஒரங்குடான் குட்டிக்கு 'சுகீஃபோ' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதற்குப் பெயர் சூட்டுவதற்கு பொதுமக்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததோடு, ஊவா-பரனகமவைச் சேர்ந்த திமுது தரிந்த என்ற சிறுவன் பரிந்துரைத்த பெயர்தான் இந்த ஒரங்குடான் குட்டிக்கு சூட்டப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் இந்தோனேஷியாவுக்கும் இடையிலான விலங்குகள் பரிமாற்றத்திட்டத்திற்கமைய, 2003 ஆம் ஆண்டில் தெஹிவளை விலங்கினக்காட்சிசாலைக்கு வழங்கப்பட்ட அகி மற்றும் யூஃபு ஆகிய இந்தோனேஷிய ஒரங்குடான்களுக்குப் பிறந்த குட்டிதான் இந்த சுகீஃபோ என்பது குறிப்பிடத்தக்கது.

O/L பரீட்சை எழுதும்
A/L பரீட்சை எழுதிய
மாணவர்களுக்கான இலவச
தபால் மூல ஆங்கில பாடநெறி.
அகில இலங்கை ரீதியில் இவ் வருடம் O/L பரீட்சை எழுதும் A/L பரீட்சை எழுதிய மற்றும் பாடசாலை மாணவர்களுக்கும் விசேட ஆங்கில பாடநெறி ஒன்றை இலவசமாக ஆரம்பிக்கவுள்ளது.
தயவு உங்கள் மற்றும் உங்கள் நண்பர்களின் விபரங்களை SMS செய்து விண்ணப்ப படிவத்தை பெறுங்கள்.
VJ இடைவெளி பெயர், முகவரி ,வயது , தொ எண்.
SMS - 0774-34 84 34
பாடநெறி ஜனவரி மாதம் ஆரம்பமாகும். # பாடநெறி முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் # பதிவு கட்டணம் மட்டும் அறவிடப்படும்.
JEFFWOOLAR EDUCATIONAL INSTITUTE- KANDY.

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.



10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.
எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பபை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/- பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகின் ஆரம்பகால விமான சேவைகள்




**உலகில் விமானங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நூறாண்டுகள் கடந்துவிட்ட நிலையில் விமானங்கள் ஆரம்பகாலத்தில் எதற்குப் பயன்படுத்தப்பட்டன? அவற்றைத் தயாரித்த நிறுவனங்கள் எவை? போன்றவற்றை அறிந்து கொள்வது முக்கியமானதாகும். அன்று பறக்கும் விமானங்கள் அமெரிக்கர்களான ரைட் சகோதரர்கள் என்னும் இரட்டையர்களால் மிகுந்த சிரமத்தின்**


ரைட் சகோதரர்கள்

**மத்தியில் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டன. இருப்பினும், அன்று (1918 இல்) அமெரிக்காவின் இராணுவப் பயன்பாட்டுக்காகவே முதன்முதலில் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன.**

அதனைத் தொடர்ந்து 1919 ஆம் ஆண்டில் 'றோயல் டச்' எனப்படும் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது. இது பின்னர் KLM என்ற பெயரில் செயற்படலாயிற்று. இதுவே சர்வதேச அளவில் மக்களின் போக்குவரத்து நடவடிக்கைக்கென ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும். 1927 ஆம் ஆண்டு வரையிலும் அமெரிக்காவில் எந்தவிதமான நாளாந்த விமானசேவைகளும் ஆரம்பிக்கப்படவில்லை. இருப்பினும், சர்வதேச தபால் சேவையின் நிமித்தம் தனியார் விமானங்கள் இதற்குப் பயன்படுத்தப்பட்டன.

அத்துடன், விமான சேவைக்காக பெண் ஊழியர்கள் 1930 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டனர். எனினும், 1932 இல் விமான சேவைக்காக பணிப்பெண்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இதே ஆண்டில் பயணிகளுக்கான விமான சேவை விமானங்கள் லொஸ் ஏஞ்ஜல்ஸிலிருந்து நியூயோர்க் வரை பறந்தன. இவ்வாறு பறப்பதற்கு எடுத்த நேரம் 39 மணித்தியாலங்கள். இந்தவிமானம் 14 இடங்களில் தரித்து நின்றே பறக்கலாயிற்று. அப்போது, அமெரிக்காவில் உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்காக, 38 விமானங்களும் சர்வதேச போக்குவரத்துக்காக, 5 விமானங்களும் சேவையில் இருந்தன. ஆனால், இன்றோ, அதிநவீன முறையில் தயாரிக்கப்பட்ட பல தரப்பட்ட விமானங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அக்காலத்தில் குறைந்தளவான மக்கள் பயணிப்பதற்கு ஏற்றவிதமாகவே, விமானங்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் 1940 ஆம் ஆண்டளவில் வேகமாகச் செல்லும் விமானங்களைத் தயாரித்து சேவையில் ஈடுபடுத்தும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இன்று உலகின் மிகப்பெரிய விமான நிறுவனமாக, ரஷ்யாவின் 'ஏரோப்பிளேட்' விமான நிறுவனம் திகழ்கிறது. இது 1923 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகும். இது தற்காலத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் விமானசேவையை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. முதன்முதலில் இரண்டு என்ஜின்கள் பொருத்தப்பட்ட விமானங்கள் 1937 ஆம் ஆண்டில் 21 பயணிகளுடன் பறந்தது. பின்னர் படிப்படியாக 100 வரையும் அதிகரிக்கப்பட்டு இன்று 400 இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணிக்கும் அளவுக்கு விமானங்கள் பெரியளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

1952 இல் பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேஸ் ஜெட் விமானங்கள் அறிமுகமாகின. 1953 இல் அட்லாண்டிக் கடலை கடந்து எவ்விடத்திலும் தரையிறங்காமல் கண்டத்தைக் கடக்குமளவுக்கு விமானங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. மிகப் பெரிய சரக்கு விமான சேவையை 1963 இல் ஏர் கெனடா நிறுவனம் ஆரம்பித்தது. இதில் பெரியளவிலான ஜெட் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. 1967 இல் யுனைடெட் எயார் லைன்ஸ் 200 பேர் செல்லக்கூடிய விமானத்தை அறிமுகப்படுத்தியது. 1968 இல்தான் அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நேரடி விமானப் போக்குவரத்துகள் ஆரம்பிக்கப்பட்டன. '747 போயிங்' விமானங்கள் 1970 ஆம் ஆண்டிலும் 'சுப்பர் சோனிக்' விமானம் 1976ஆம் ஆண்டிலும் அறிமுகமாகின. பின்னர் அதிவேக விமானங்களை எயார் பிரான்ஸ், பிரிட்டிஷ் எயார் வேஸ், பான் அமெரிக்கன் வேல்ட் எயார்வேஸ் என்பனவும் ஆரம்பித்தன. இன்றும் இவை முன்னணியில் திகழும் விமான நிறுவனங்களாகும்.

மத்திய கிழக்கு நாடுகளில் இன்று பல பெயர்களில் விமான சேவை நிறுவனங்கள் இயங்குகின்றன. நமது நாட்டிலும் 'எயார் சிலோன்' என்ற பெயரில் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், ஸ்ரீலங்கன் விமானசேவை, எயார் லங்கா என்றும் இன்று மிகின்லங்கா என்றும் விமான சேவைகளின் பெயர்கள் மாறுபட்டுக்கொண்டே செல்கின்றன. தனியார் விமான சேவைகளும் நமது நாட்டில் இருக்கின்றன. உபாலி நிறுவனம் ஆரம்ப காலங்களில் தனியான விமான சேவையை நடத்தியது. இவ்வாறே, விமான சேவைகளும் அதன் தொழில்நுட்பங்களும் நாளுக்கு நாள் வளர்ச்சி அடைந்து கொண்டே செல்கின்றன.

**எஸ்.எல்.மன்சூர்**

ரைட் சகோதரர்களின் முதலாவது விமானம்



## அமெரிக்க விமான மயானம்



**உலகின் மிகப்பெரிய விமானத்தளமாகவும் பயற்சி விமானத் தளமாகவும் திகழ்கிறது. அமெரிக்க அரிசோனா மாகாணத்திலுள்ள 'டேவிஸ்' விமானப் படைத்தளத்தில் சிதைந்த, நொருங்கிய, உடைந்த, பாவனைக்கு உதவாத புனரமைக்க முடியாத பழைய விமானங்கள் 4,200 அளவில் கைவிடப்பட்டிருக்கின்றன. அதனால்தான் அதற்கு 'விமான மயானம்' எனப்பெயர் வந்திருக்கிறது.**

**2,600 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட இத்தளம் 1,430 உதைபந்தாட்ட மைதானங்களை அமைக்கக்கூடிய அளவு பெரியதாகும். 2 ஆம் உலக மகா யுத்தத்துக்குப் பின்னர் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட விமானங்களே இவைகளாகும்.**

**2006 ஆம் ஆண்டு அமெரிக்கக் கடற்படையால் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட 'F14 டொம்கெட்' தாக்குதல் ஜெட் விமானம், 'A10 தண்டர்போல்ட்' தாக்குதல் விமாணம், தாக்குதல் விமானங்களுக்கு வானத் திலிருந்தே எரிபொருள் வழங்கும் 'K.C135' விமானம் ஆகியன இங்கு கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இவை மட்டுமல்ல; ஒதுக்கப்பட்ட 40 ஆகாயப் பயிற்சிக்கான விமானங்களும் இங்குள்ளன. இதுவரை ரகசியமாக வைக்கப்பட்டிருந்த இந்த விமான மயானம் பற்றிய ரகசியம் பல்வேறு நாடுகளினதும் செய்மதிகள் மூலம் அம்பலமாகியுள்ளது.**



**ஏ.ஜே.எம். நிழாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் அவசியம்



(கடந்த வாரத் தொடர்ச்சி)




மாணவர்களுக்கு அறிவைப் போதிப்பதால் மட்டும் அவர்களிடம் பூரண முன்னேற்றத்தை எதிர்பார்த்து விட முடியாது. மாறாக, மாணவர்கள் தம்மைச் சரிவர உணர்ந்து கொள்வதற்கு ஏற்ற முறையில் அவர்களுக்கு உதவிகளும் வழங்கப்படல் வேண்டும். அவ்வாறே, கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கான உகந்த போதனையை வழங்கும் பொருட்டு தெளிவுறுத்தல்கள் வழங்கப்படல் வேண்டும்.

எமது கல்விப் போதனை முறையில் அடிப்படை மாற்றங்கள் தேவையாகவே இருக்கின்றன. ஒருவர் பாட அறிவு பெற்றிருந்தபோதிலும் தன்னைப் பற்றிச் சிந்திக்கத் தெரியாதிருந்தால், அவரைக் 'கற்றவர்' எனக் கருத முடியாது. ஏனெனில், தன்னைத் தான் அறிந்திருத்தல் என்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும். ஆனால்,



## கல்வி முகாமைத்துவம் - 35

### கற்றலுக்கான ஆலோசனைகள்

இவ்வாறான கல்வி எதுவும் கல்விக் கூடங்களில் போதிக்கப்படுவதில்லை. இதனை ஆலோசனை கூறல், வழிகாட்டலின் ஊடாகவே போதிக்க வேண்டும்.

உயர்ந்த வருமானம் என்னும் விடயத்தை நாம் மேலோட்டமாகப் பார்த்தால், நன்கு ஒழுங்கு படுத்தப்பட்ட வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் அதற்கு மிகவும் தேவை என்பதைப் புரிந்துகொள்ளலாம். கல்வியானது விரிவடைந்து-எல்லைகளைத் தாண்டிச் செல்கின்ற இன்றைய நிலையில், மாணவர்களுக்கு கற்கைநெறிகளைத் தெரிவு செய்தல் மற்றும் தொழில் தேர்வு என்பனவற்றில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன.

எமது கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கல்வி அமைப்பு, நிர்வாகம் ஆகியவற்றின் பல்வேறு தேவைகளின்போது, அவற்றுக்கு முகம்கொடுப்பதற்கு மாணவர்களுக்கு உரிய வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். மாணவர்களின் அறிவு விருத்திக்கு பாடங்கள் மூலம் பெறப்படும் நுண்ணறிவு விருத்தி மட்டும் போதாது. மாணவர்கள் தம்மை உணரவும் ஆசிரியர்கள் மாணவர்களைப் புரிந்து கொள்வதற்கும் ஏதாவது முறையொன்றும் இனங்காணப்படல் அவசியமாகின்றது.

தற்போதைய மாணவர்களின் முழுமையான முன்னேற்றமே இன்றைய தேவையாக இருக்கின்றது. இது அனைவராலும் விளங்கப்படல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். இதற்காக, சிறந்த முறையில் திட்டமிடப்பட்டு, சிறந்த அனுபவம் மிக்கவர்களால் பாடசாலைகள் தோறும் ஆலோசனை வழங்கல், வழிகாட்டல் நிகழ்வுகள் என்பன அறிமுகம் செய்யப்படுவது சிறந்தது. அத்துடன், மாணவர்களின் சிந்தனையை அவை சென்றடையவும் சிறந்த கற்பித்தல் மூலம் மாணவர்கள் சரியான சிந்தனைகளைப் பெறவும் வேண்டும். இவ்வாறான போதனைகளின் மூலமே திறமைமிக்க-சக்திமிக்க பிரஜைகளை உருவாக்க முடியும்.

**'கல்வியானது விரிவடைந்து-எல்லைகளைத் தாண்டிச் செல்கின்ற இன்றைய நிலையில், மாணவர்களுக்கு கற்கைநெறிகளைத் தெரிவு செய்தல் மற்றும் தொழில் தேர்வு என்பனவற்றில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன'**





(தொடரும்)

-எம்.ஏ.எஃப். சப்ரானா

# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



பளுவெவ மு.ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி ஏ.கே.நஜ்லா, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கலீல்-துல்ஹைதா தம்பதியரின் புதல்வியாவார்.



ப/தம்பேத்தன்னை இல.2 தமிழ் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் வி.ரசிகா, 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், விஜயகுமார்-சுகந்தமலர் தம்பதியரின் புதல்வியாவார்.



எலுவிலை அலவியா மு.ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி சுமையா பேகம், 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், தாஜுல் ஹனாம்-சரபுன் நிஸா தம்பதியரின் புதல்வியாவார்.



கிண்ணியா மு.ம.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் பாத்திமா தஹ்ஸின், 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், முபாறக்-நிஸாயா தம்பதியரின் புதல்வியாவார்.



எம்.சப்தார், 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். எலுவிலை அலவியா மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இவர், லாபிர்-ரொஷானா தம்பதியரின் புதல்வராவார்.



பாத்திமா ஹனான், 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கிண்ணியா மு.ம.ம.வித்தியாலய மாணவியான இவர், அப்துல் வஹாப்-நசூஹா தம்பதியரின் புதல்வியாவார்.



எலுவிலை அலவியா மு.ம.வித்தியாலய மாணவரான ஏ.அப்துல் ரஹ்மான், 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அனீஸ்-ரிலாயா தம்பதியரின் புதல்வராவார்.



கிண்ணியா மு.ம.ம. வித்தியாலய மாணவியான நிப்னா பானு, 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், முஜீப்-ரனீஸா தம்பதியரின் புதல்வியாவார்.



தில்லையடி மு.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் நிசாக் முஹம்மட், 143 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப்.ராஸிதா, 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், க/பாத்திமா பாலிகா மு.ம.வித்தியாலய மாணவியாவார்.



தில்லையடி மு.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் முஹம்மது றனீஸ், 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



க/வெலம்பொட மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எஃப்.ரஹ்னா, 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கௌஸ்-தாஹிரா தம்பதியரின் புதல்வியாவார்.



ப/தம்பேத்தன்னை இல.02 தமிழ் வித்தியாலய மாணவி ஆர்.டினுஷா, 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ராஜா-பரமேஸ்வரி தம்பதியரின் புதல்வியாவார்.



தலவாக்கலை த.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வி.லகீஷன், 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



ப/தம்பேத்தன்னை இல.02 தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் ஜீ.சுஷாந்தன், 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கணேஷன்-சிவசங்கரி தம்பதியரின் புதல்வராவார்.



தலவாக்கலை த.ம.வித்தியாலய மாணவன் ஜே.சுஜிடிலுக்ஷன், 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



மட்/காவத்தமுனை அல்-அமீன் வித்தியாலயத்திலிருந்து சித்தியடைந்த மாணவர்கள் தமது பாடசாலை அதிபர் ஏ.எல்.மீராஸாஹிபு மற்றும் வகுப்பாசிரியர் ஏ.சி.எம்.அஜ்மீர் ஆகியோருடன் நிற்பதை படத்தில் காணலாம். மாணவர்களின் விபரங்கள் வருமாறு; (இ.வ) எம்.றிஸ்மி (147 புள்ளிகள்), எம்.ஸஜீத் (160 புள்ளிகள்), எம்.ரினாஸ் (153 புள்ளிகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினைத்திறனை வீட்



சமையலறையை ஒழுங்காக வைத்தல்

எமது பாரம்பரிய குடும்ப முறைகளில் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. தாய், தந்தை, பாட்டன், பாட்டி ஆகியோர் மட்டுமன்றி, பிற சகோதர, சகோதரிகளைக் கொண்ட குடும்ப உறுப்பினர்களும் இருந்துள்ளனர். இந்தக் குடும்ப அலகுகளில் வாழ்ந்த பிள்ளைகளுக்கு பாடசாலைக் கல்விக்குப் புறம்பாக, பலதரப்பட்ட அனுபவப் பாடங்கள் வீட்டிலிருந்த வயது வந்தோர்களிடம் இருந்து கிடைக்கப் பெற்றன.

அத்துடன், கிராமிய வாழ்க்கையில் விவசாய வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டிருந்த கிராமத்தவர்களின் வீடு, சமையலறை என்பனவற்றில் சிறந்த வினைத்திறன்கள் பேணப்பட்டன. சமையலறையில் புகை வெளியேற்றி சரியான இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே, உரல், உலக்கை, கேத்தல், வட்டி, பானை, குடம், சிரட்டை, பாய், அம்மி, குப்பி லாம்பு என்பன மட்டுமன்றி தும்புத்தடி, ஈர்க்கிள் கூட்டுமாறு என்பனவும் அவற்றுக்கே உரிய இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. அவர்களின் வாழ்க்கையிலும் இந்த ஒழுக்க நடைமுறைகள் பின்பற்றப்பட்டன. முன்னோர்கள் மத்தியில் காணப்பட்ட இந்த நற்குணங்களை, வினைத்திறன்களை நாம் மீண்டும் பின்பற்றிக் கொள்ள வேண்டும்.

## வீட்டின் ஒழுங்குமுறைகள்

சிறந்த உடல், உள ஆரோக்கியத்தைப் பேண வீட்டின் ஒழுங்குமுறை மிகவும் அத்தியாவசியமாகும்.

## சமையலறை

வீட்டின் மிக முக்கிய இடம் சமையலறையாகும். வீட்டு உறுப்பினர்களுக்கு இங்கேயே உணவு தயாரிக்கப்படுகின்றது. நாளாந்தம் 2, 3 தடவைகள் உணவு தயாரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால், சமையலறையை ஒழுங்காக, சுத்தமாக வைத்திருப்பது அவசியமாகும். அதற்கான உபாயங்கள் சில:

* சமையலறையின் அனைத்துப் பொருட்களையும் சமையலுக்கு உதவும் வாசனைப்பொருட்களையும் வெவ்வேறு போத்தல்களில் இட்டு பெயரிட்டு வைக்க வேண்டும்.
* நாம் அடிக்கடி பயன்படுத்தும் சீனி, தேயிலை, வாசனைப் பொருட்களை அருகிலும் இடைக்கிடை பயன்படுத்தும் பொருட்களான ஹீட்டர், மிக்சி என்பனவற்றை சற்றுத் தூரத்திலும் வைக்க வேண்டும்.
* குளிர்சாதனப் பெட்டி சமையலறையில் இருக்க வேண்டும்.
* கழிவுகளை இட ஒரு தனிக் கொள்கலனை வைத்து அதனை வகைப்படுத்தி வைக்க வேண்டும்.

## வீட்டின் வரவேற்புப் பகுதி

வீட்டின் அழகை மேம்படுத்துவது வரவேற்பறையாகும். காற்றோட்டமும் சூரிய வெளிச்சமும் நன்கு கிடைக்கும் வகையில் கதவு, ஜன்னல்களை அமைத்திருக்க வேண்டும். இங்கு குறிப்பிட்ட சில பொருட்களே இருத்தல் வேண்டும். நாற்காலிகள், தொலைக்காட்சி என்பன முக்கியம். படுக்கையறை, குளியலறை என்பன ஏனைய முக்கிய பகுதிகளாகும். படுக்கையறை எனின், தமக்குத் தேவையான நூல்கள், அவற்றை வைத்துக்கொள்ள மேசை, உடைகளை வைக்க அலுமாரி, கட்டில் ஆகியவை இருத்தல் அவசியம்.

குளியலறையை ஒழுங்காக, சுத்தமாக வைத்துக்கொள்ள எப்பொழுதும் முயற்சிக்க வேண்டும். சவர்க்காரம், ஷெம்பூ, பற் தூரிகைகள் என்பனவற்றை குறிப்பிட்ட இடத்திலும், அவற்றை பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கும் வகையிலும் பாதுகாப்பாக வைக்க வேண்டும்.

## வீட்டுத்தோட்டம்

வீட்டை மட்டுமன்றி, வீட்டுத் தோட்டத்தையும் அழகுடன் வைத்திருக்க நம்மால் முடியும். அக்கறை இருப்பின், இவ்வாறான சூழலை உருவாக்கிக்கொள்ளல் மிகவும் எளிதாகும்.

* தமது காணியைச் சுற்றி பாதுகாப்பான வேலி அல்லது வசதி இருப்பின், மதில் ஒன்றை அமைத்தல்.
* பூக்கள் மற்றும் பழ மரங்களை வளர்த்தல்.
* வீட்டின் அழகுக்காகவும் பயனுக்காகவும் காய்கறிகள், கறிவேப்பிலை, இஞ்சி, எலுமிச்சை போன்ற தாவரங்களை வளர்த்தல்.
* மண் அரித்துச் செல்வதனைத் தடுக்க வாய்க்கால், கற்கள் கொண்ட பகுதிகளை உருவாக்கல்.
* கழிவு முகாமைத்துவத்திற்கு 'கொம்போஸ்' உரப் பயன்பாட்டினை மேற்கொள்ளல்.
* பறவைகள் குளியல் தடாகம், அவற்றுக்கு உணவு வழங்குவதற்கான பகுதிகள் என்பனவும் வீட்டிற்கு மேலும் அழகைப் பெற்றுத் தரும்.

## வினைத்திறனுடன் சுத்தம்

எமது முன்னோர்கள் அறிந்தோ, அறியாமலோ வினைத்திறன் என்ற எண்ணக்கருவினை செயற்படுத்தி சுத்தம் என்ற விடயத்தினைப் பின்பற்றினர். சுத்தம் என்ற விடயம் கிராமிய வாழ்க்கையில் மிக முக்கியமான அங்கமாக விளங்கியது. அந்த வகையில் சமையலறை அடிக்கடி சாணத்தால் மெழுகப்பட்டது. சோறு வடிதட்டு, சுளகு என்பன அடிக்கடி புதுப்பிக்கப்பட்டன. தேவையற்ற பொருட்கள் இல்லாமையினால் இருக்கும் பொருட்களை சுத்தமாக வைத்திருப்பது இலகுவாக இருந்தது. அத்துடன், நோய்களில் இருந்து உரிய பாதுகாப்பைப் பெற சுத்தமாக



சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிலிருந்தே ஆரம்பிப்போம்




தேவையான பொருட்களை போத்தல்களில் இட்டு லேபள் ஒட்டுதல்

படுக்கை அறையை சுத்தமாக வைத்தல்

இருப்பது மிகவும் அவசியமாகும். அதற்கு :

- சிறந்த சுகாதாரப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுதல்.
- நாளாந்தம் காலையிலும் இரவு உணவின் பின்னரும் பல் துலக்குதல்.
- இருக்கும் ஆடைகளை சுத்தமாகத் துவைத்து அணிதல்.
- உணவு உட்கொள்வதற்கு முன்னரும், மலசலகூடத்திற்கு சென்று வந்த பின்னரும் சவர்க்காரம் இட்டுக் கைகளைக் கழுவுதல்.
- நோய்கள் குறித்து அதிக அக்கறை காட்டுதல்.
- உணவு தயாரிக்கும் முன் நன்கு கைகளைக் கழுவுதல்.
- சமையலறையில் சமைத்த உணவுகளை நன்கு மூடி வைத்தல். இவற்றின்மூலம் ஈக்கள் மொய்ப்பதைத் தடுத்தல்.
- குளிர்சாதனப் பெட்டியை அடிக்கடி சுத்தப்படுத்தி வைத்துக் கொள்ளல்.
- குளியலறை, மலசலகூடம் என்பனவற்றை அடிக்கடி சுத்தமாக வைத்துக் கொள்ளல்.
- எப்பொழுதும் படுக்கையறை, வரவேற்பறை என்பனவற்றுக்கு நன்கு சூரிய ஒளி, காற்றோட்டம் கிடைக்க வழி செய்தல்.
- படுக்கை விரிப்பு, மேசை விரிப்பு என்பனவற்றை சுத்தமாக வைத்திருந்தாலும் அவற்றை அடிக்கடி மாற்றுதல்.

**எமது முன்னோர்கள் அறிந்தோ, அறியாமலோ வினைத்திறன் என்ற எண்ணக்கருவினை செயற்படுத்தி சுத்தம் என்ற விடயத்தினைப் பின்பற்றினர். சுத்தம் என்ற விடயம் கிராமிய வாழ்க்கையில் மிக முக்கியமான அங்கமாக விளங்கியது.**

## கல்வித்திறன் விருத்தி

பிள்ளைகளின் கல்வித்திறனை விருத்தி செய்வது வீட்டின் மற்றுமொரு முக்கிய பணியாகும். அநேகமாக, நூல்களை வாசிப்பது, பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிப்பது, இலத்திரனியல் ஊடகங்களில் கல்வி நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பன இங்கு முக்கியமாகும். அத்துடன், கல்வியில் திறன் விருத்தி பெற, கிரமமான நடைமுறைகள் என்பது மிக அவசியமாகின்றது. அதாவது, பிள்ளைகள் தமது காலணிகள், பேனா, பென்சில்களை ஒழுங்காக ஓர் இடத்தில் உரிய முறையில் வைக்கப் பழகிக்கொள்ளல், நேர முகாமைத்துவத்தைப் பின்பற்றுதல் என்பன இதில் முக்கியத்துவம் பெறுகின்றன.

## சிக்கனம்

வெற்றிகரமான வாழ்க்கைக்கு சிக்கனம் என்பது மிக அவசியமானதாகும். தமக்குரிய விடயங்களை சிக்கனமாகப் பயன்படுத்தல், பணத்தை தேவையான விடயங்களுக்கு மட்டும் பயன்படுத்தல், பணத்தை மென்மேலும் விருத்தி செய்தல் என்பன அவசியமாகின்றது. இதற்குப் பல வழிவகைகள் உண்டு.

இடவசதிகள் இருப்பின், வீட்டுத் தோட்டச் செய்கையை விருத்தி செய்வதன் மூலம் ஓரளவு காய்கறிகள், பழவகைகள், மருத்துவக் குணமிக்க செடிகள் என்பனவற்றைப் பயிரிட முடியும். இதன் ஊடாக, சந்தையில் இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான பணத்தை மிச்சப்படுத்த முடியும்.இதனால், குடும்ப ஆரோக்கியத்தையும் பேண முடியும்.

## விரயத்தினைக் குறைத்தல்

மின்சாரம், எரிபொருள், நீர் போன்றவற்றைப் பயன்படுத்தும்போது, விரயத்தினைக் குறைத்துக்கொள்ள வேண்டும். தேவையற்ற மின்விளக்குகளை அணைத்து விடல், குறைந்த மின் செலவு கொண்ட மின்குமிழ்களைப் பயன்படுத்தல், அனைத்து உடைகளையும் ஒரே தடவையில் மின் அழுத்தியினால் அழுத்துதல், குளிர்சாதனப் பெட்டியின் கதவுகளை அடிக்கடி திறந்து மூடாமல் இருத்தல், சூரிய ஒளி படாதபடி குளிர் சாதனப் பெட்டியை வைத்தல் எனும் செயற்பாடுகளின் மூலம் மின் விரயத்தினைக் குறைத்துக் கொள்ளலாம். அத்துடன், கீழ்வரும் விடயங்கள் மூலமும் விரயங்களைத் தவிர்க்கலாம்.

- தேவையற்ற பொருட்களைக் கொள்வனவு செய்யாமை. (விளம்பரங்களைப் பார்த்து தேவையற்ற முறையில் உணவு, உடைகளைக் கொள்வனவு செய்யாமை)
- உணவை விரயமாக்காமல் சமைத்தல்.
- பொலிதீன் பைகள், பிளாஸ்டிக் என்பனவற்றை சுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்துதல் என்பனவற்றின் மூலமும் சிக்கனமான வாழ்க்கை முறைகளை மேற்கொள்ள முடியும்.




வீட்டுத் தோட்டத்தை சுத்தமாக வைத்திருத்தல்


அவசியமற்ற மின்விளக்கை அணைத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிம்பாப்வே


(ச்)சபுங்கு சிற்பச் செதுக்கல் பூங்கா


மடொபஸ் தேசிய வனவிலங்கியல் பூங்காவில் உள்ள கல் உருவங்கள்


விக்டோரியா நீர்வீழ்ச்சி

**அரசு:** ஒரு சட்ட சபையைக்கொண்ட ஒரு கட்சிக் குடியரசு.

**தேசிய பெயர்:** சிம்பாப்வே குடியரசு (Republic of Zimbabwe).

**அதிபர்** (1980): ரொபர்ட் முகாபே.

**பிரதமர்** (2009): மோர்கன் டிஸ்வான்கிராய்.

## புவியியல்

சிசில் ரோட்ஸ் எனும் பிரிட்டிஷ் தொழிலதிபரால் உருவாக்கப்பட்ட நாடாகிய சிம்பாப்வே, தென் மத்திய ஆபிரிக்காவில் முற்றிலும் நிலத்தால் சூழப்பட்ட ஒரு நாடாகும். இதன் **கிழக்கு**-மொசெம்பிக், **வடக்கு**-செம்பியா, **மேற்கு**-பொ(ட்)ஸ்வானா; **தெற்கு**-தென்னாபிரிக்கா ஆகியன எல்லைகளாக அமைந்துள்ளன. நாட்டின் முக்கிய நீர்நிலையாக கரிபா ஏரி அமைந்துள்ளது. செம்பஸி, லிம்போபோ, ருண்டே என்பன முக்கிய நதிகளாகும்.

**மொத்தப் பரப்பு:** 150,804 ச.மைல் (390,580 ச.கி.மீற்றர்). **நிலப்பரப்பு:** 149,293 ச.மைல் (386,669 ச.கி.மீ).

**நிலப்பிரிவுகள்:** 8 மாகாணங்கள் மற்றும் 2 மாகாண அந்தஸ்துள்ள நகரங்கள்.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** ஹராரே.

**ஏனைய பெரிய நகரங்கள்:** புலவாயோ, சிட்டுங்விஸா.

**உயர் மலைச்சிகரம்:** இன்யங்கனி (2,592 மீற்றர்); **தாழ் மையம்:** ருண்டே மற்றும் சேவ் ஆறுகள்.

**சனத்தொகை** (2009): 11,392,629.

**நாணயம்:** சிம்பாப்வே டொலர்.

**மொழிகள்:** ஆங்கிலம் (உத்தியோகபூர்வ மொழி), ஷோனா, டேபிலா.

**இனக்குழுவினர்கள்:** ஆபிரிக்கர் 98%, ஆசியரும் கலப்பினத்தோரும்-1%, வெள்ளையரல்லாதோர் 1%.

**சமயங்கள்:** சிங்ரெட்டிக் எனும் கிறிஸ்தவமும் உள்ளூர் மத நம்பிக்கைகளும் இணைந்த கலப்பின மதம் 50%, கிறிஸ்தவம் 25%, உள்ளூர் நம்பிக்கைகள் 24%, இஸ்லாம் மற்றும் ஏனைய மத நம்பிக்கைகள் 1%.

**எழுத்தறிவு** (2003): 91%.

**இணையத்தளக் குறியீடு:** .zw

**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** +263

**தேசிய கீதம்**

Simudzai mureza wedu weZimbabwe

Yakazvarwa nemoto wechimurenga;

Neropa zhinji ramagamba

Tiidzivirire kumhandu dzose;... என ஆரம்பமாகின்றது.

## வரலாறு


தேசிய இலச்சினை






சிம்பாப்வேயின் ஆரம்பக் குடிகளாக 'கோயிசன் 'இனத்தவர்களை குறிப்பிடலாம். இக்குடியேற்றங்கள் கி.மு 200 க்கு முன் நடந்ததாக வரலாறு கூறுகின்றது. அதன்பின்னர் 'பண்டு' இனத்தவர்களினதும் 'ஷோனா' மக்களின் ஆட்சியும் நிலவின. அவர்களைப் பின்பற்றி நிகுனி மற்றும் ஸுளு மக்களும் குடியேறினர்.

1850 களில் முதலாவது பிரித்தானிய கண்டுபிடிப்பாளர்களும் குடியேற்றவாசிகளும் கிறிஸ்தவ மிஷனரிமார்களும் வருகை தந்து குடியேற்றங்களை அமைத்தனர். சிசில் ரோட்ஸ்ஸை முன்னிலைப் படுத்தி 'ரொடீஷியா' எனப் பெயர் பெற்றது. இந்நாட்டில் 1963 இல் வெள்ளை சிறுபான்மை அரசு ஒருதலைபட்சமாக சுதந்திரத்தைப் பிரகடனம் செய்ததையடுத்து உள்நாட்டுக் கலவரம் ஏற்பட்டது. 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலை அடுத்து ரொபர்ட் முகாபே தலைமையில் கறுப்பினத்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட அரசு உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிம்பாப்வே எனும் பெயரில் முழுச் சுதந்திரம் அடைந்தது. ஆரம்பத்தில் ஒரே கட்சி சோசலிஸ அரசை நிறுவிய முகாபே, பின்னர் பல கட்சித் தேர்தலை நடத்தினார். புதிதாக உருவாக்கப்பட்ட நாடாளுமன்ற மேலவைக்கு நடைபெற்ற தேர்தலில் ஆளும் ஸானு-பிஎப் கட்சி பெரும்பான்மை பலம் பெற்றது.

## காலநிலை

நொவெம்பர் முதல் ஏப்ரல் வரை அளவான வெப்பமும் அதிக மழைவீழ்ச்சியும் காணப்படும். சிம்பாப்வேயின் பருவ காலங்கள் அனைத்தும் வட அரைக்கோளத்திற்கு நேர்மாறானதாகவே நிகழும். அதாவது, இலையுதிர்க்காலம் செப்டெம்பர் முதல் ஒக்டோபர் வரை நிகழ்கின்றது. கோடைகாலமானது ஒக்டோபர் முதல் மார்ச் நடுப்பகுதி வரை நிகழும். மாரிகாலமானது மே முதல் ஒகஸ்ட் வரை காணப்படும்.

## கலாசாரம்

பல்வேறு விதமான மாறுபட்ட கலாசாரங்களை இந்நாட்டு மக்களின் மதநம்பிக்கைகளிலும் வழிபாடுகளிலும் வைபவங்களிலும் காணலாம். அதில் குறிப்பிடக்கூடியது தான் 'ஷோனா' கலாசாரமாகும். ஷோனா மக்கள் சித்திரம் மற்றும் சிற்பவேலைகளில் கைதேர்ந்தவர்கள். இதனை அவர்களின் வழிபாட்டுத் தலங்களிலும் பல்வேறு பொருட்களின் உருவாக்கத்திலும் வெளிப்படுத்துவர்.







## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் 331,700; செல்லிடத் தொலைபேசிகள் 832,500. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): AM 7, FM 20, SW 1. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997): 16. **இணையத்தள வழங்குனர்கள்** (2000): 6. இணையத்தளப் பாவனையாளர்கள்: 1 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2002): மொத்தம் 3,077 கி.மீ. **பெருந் தெருக்கள்**: மொத்தம் 97,440 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 18,514 கி.மீ; செப்பனிடப் படாதவை 78,926 கி.மீ). **நீர்வழிப் போக்குவரத்து:** மாஸோயி மற்றும் செம்பஸி ஆறுகள் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படுகின்றன. **துறையும் துறைமுகமும்** (2002): பின்கா, கரிபா. **விமான நிலையங்கள்** (2002): 430.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 8%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள், பருத்தி, கரும்பு, செம்மறியாடுகள், பன்றிகள். **தொழிலாளர் தொகை** (2007): 4.032 மில்லியன். **பிரதான கைத்தொழில்கள்:** கனியக் கைத்தொழில், புடவை, பாதணிகள் உணவுப் பொருட்கள். **இயற்கை வளங்கள்:** உலோகங்கள். **ஏற்றுமதிகள்** (2006): பருத்தி, புகையிலை, தங்கம், புடவை. **இறக்குமதிகள்** (2006): இயந்திரங்கள், போக்குவரத்து உபகரணங்கள், ஏனைய உற்பத்திப் பொருட்கள், எரிபொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): தென் ஆபிரிக்கா, சுவிற்சர்லாந்து, ஐக்கிய ராச்சியம், சீனா, ஜேர்மனி, பொ(ட்)ஸ்வானா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

◆ சமூக விஞ்ஞான நூதனசாலை ◆ ஹராரே பூங்கா ◆ (ச்)சபுங்கு சிற்பச் செதுக்கல் பூங்கா ◆ தேசிய தாவரவியல் பூங்கா ◆ வார்வோன் பறவைகள் பூங்கா ◆ முகுவிசி வுட்லேண்ட்ஸ் ◆ விக்டோரியா நீர்வீழ்ச்சி ◆ மடொபஸ் தேசிய வனவிலங்கியல் பூங்கா ◆ கரிபா ஏரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - 11 (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ..................................................... நேரம்: 1 மணி 15 நிமிடங்கள்


28. கண்ணாடிப் பாத்திரமொன்றில் பனிக்கட்டி ஒன்றை இடும்போது, அப்பாத்திரத்தில் பனிக்கட்டியின் அமைவை சரியாகக் காட்டும் உரு எது?




29. அரச இலச்சினையில் நெற்கதிர்கள் வெளிப்படுத்துவது;
   (1) தார்மீகம் (2) தன்னிறைவு
   (3) சௌபாக்கியம் (4) நிலைத்திருப்பவை

30. 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் எந்த நாட்டின் தலைநகரில் நடைபெறவுள்ளது?
   (1) எதென்சில் (2) பீஜிங்கில் (3) லண்டனில் (4) பாரிசில்

31. இந்த உபகரணங்களைப் பயன்படுத்தி வேலைசெய்வோர் யார்?




   (1) மின்வேலை செய்வோர் (2) தோட்ட வேலை செய்வோர்
   (3) தச்சுவேலை செய்வோர் (4) கட்டட வேலை செய்வோர்

32. சூரிய குடும்பத்தின் பெரிய கிரகமாக (கோளாக) விளங்குவது எது?
   (1) சனி (2) செவ்வாய் 3) வெள்ளி (4) வியாழன்

33.  இக்குறியீட்டின் மூலம் விளங்குவது எது?
   (1) சரணாலயம் (2) தொடர்பாடல்
   (3) சமாதானம் (4) பாதுகாப்பு

34. உடல் ஆரோக்கியம், உள ஆரோக்கியம் என்பனவற்றைப் பேண நாம் கடைப்பிடிக்க வேண்டியது;
   (1) யோகாசனம் (2) எளிய உடற்பயிற்சி (3) மூச்சுப்பயிற்சி (4) தியானம்

35. அடக்கமும் நேர்மையும் உள்ள ஆபிரகாம் லிங்கன் பிற்காலத்தில் அமெரிக்க தேசத்தின் ஜனாதிபதியானார். ஆபிரகாம் லிங்கனின் படத்தைத் தெரிவு செய்க.




36. தோசம் நீக்கிக் கொள்வதற்காக 'பிரித் ஓதிய நீர்' தெளித்தல் எந்த மதத்தவரின் சமயச் சடங்கு?
   (1) தமிழர்கள் (2) பௌத்தர்கள் (3) முஸ்லிம்கள் (4) கிறிஸ்தவர்கள்

37. பயிர்களை சேதப்படுத்தும் நத்தைகளை உணவாக உட்கொள்ளும் பிராணி எது?
   (1) எலி (2) தவளை (3) கொக்கு (4) செண்பகம்


★ *இலங்கையின் பாரம்பரிய, கிராமிய விளையாட்டுகளின் பெயர்களை எழுதுக.*


38.  ..................................


39.  ..................................

★ *புராதன இலங்கையின் கலைத்துவப் படைப்புகளின் பெயர்களை எழுதுக.*

40.  ..................................

41.  ..................................

42.  இரு உலர் மின்கலங்களும் ஒரு மின்குமிழும் உருவில் காணப்படுகின்றன. மூன்று வயர் (கம்பித்) துண்டுகளை மாத்திரம் பயன்படுத்தி மின்குமிழை ஒளிரச் செய்வதற்கு உலர் மின்கலங்களையும் மின்குமிழையும் தொடுக்க வேண்டிய விதத்தை வரைக.

43.  உருவில் காணப்படும் செவ்வகத்தின் இரு சமச்சீர்க் கோடுகளையும் வரைக.

44. XIX உரோமன் எண்குறியை இந்து அராபிய எண்ணில் தருக. ..................................

45. பூக்கன்று நாற்றுமேடை ஒன்றில் 3,874 அந்தூரியம் பூக்கன்றுகளும் 4,578 ஓர்கிட் கன்றுகளும் உள்ளன. இப்பூக்கன்றுகளின் மொத்த எண்ணிக்கை யாது? ..................................




★ *சந்தி ஒன்றில் பொருத்தப்பட்டுள்ள- கிலோமீற்றர் அளவு குறிக்கப்பட்டுள்ள காட்சிப்பலகையை அவதானித்தபின், 46 மற்றும் 47 ஆம் வினாக்களுக்கு விடை தருக.*


46. நீர்கொழும்பிலிருந்து மங்கள எலிய வரையுள்ள தூரம் எவ்வளவு? ..................................

47. கொழும்பிலிருந்து புத்தளம் ஊடாக, அநுராதபுரம் வரையுள்ள தூரம் எவ்வளவு? ..................................





48. பெட்டியொன்றில் 5 இறப்பர் பந்துகளை அடுக்கலாம். அவ்வாறான 520 பந்துகளை அடுக்குவதற்கு எத்தனை பெட்டிகள் தேவைப்படும்? ..................................

49. உருவில் ஒரு சதுரமுகி காணப்படுகிறது. அதன்,
   (1) விளிம்புகளின் எண்ணிக்கை ..................................
   (2) முகங்களின் எண்ணிக்கை ..................................




50. வரிப்படத்தில் காணப்படும் பென்சிலின் நீளம் யாது?





..................................

51.  உருவில் நிழற்றப்பட்ட பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக. ..................................

52. 8m நீளமான கம்பித்துண்டு ஒன்றில் 3m 25cm நீளமுள்ள ஒரு துண்டு வெட்டப்பட்டது. மீதித் துண்டின் நீளம் யாது? ..................................

53.  இவ்வுருவிலுள்ள;
   (i) செங்கோணங்களின் எண்ணிக்கை யாது? ..................................
   (ii) செங்கோணத்திலும் குறைந்த கோணங்களின் எண்ணிக்கை யாது? ..................................


54. 1kg சீனியின் விலை ரூபாய் 72.00 எனின், 1kg 750g நிறையுள்ள சீனியின் விலை என்ன? ..................................

55. 

இவ்வுருவின் சுற்றளவைக் காண்க. ..................................

56. பாத்திரமொன்றில் 4l 535ml பாலும் இன்னொரு பாத்திரத்தில் 5l 680ml பாலும் உள்ளது. இரு பாத்திரங்களிலும் உள்ள பாலின் மொத்த அளவு யாது? ..................................

57. வீட்டுத் தோட்டத்தில் நான்கு வகையான பூக்கள் பற்றிக் குறிப்பிடும் பூரணமற்ற வரைபு உருவில் காண்ப்படுகிறது. ரோஜாப் பூக்களின் எண்ணிக்கை அந்தூரியப் பூக்களினதும், செவ்வந்திப் பூக்களினதும் கூட்டுத்தொகைக்கு சமம். ரோஜாப் பூக்களின் எண்ணிக்கையை வரைபில் உரிய நிரலில் குறித்து அந்நிரலை நிழற்றுக.




## வினாத்தாள் - 11 இன் விடைகள்

*(டிசம்பர் 22, 29 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)*

(01) 1. குடைகள் 2. வடிவு, எழில், வனப்பு 3. தண்மை 4. வண்ண வண்ண 5. பெரியோர்/சிறுவர் 6. சின்னஞ்சிறிய

(02) 1. அந்த வீதியில் இரு பக்கங்களிலும் நிழல் மரங்கள் நின்றன.
2. எல்லோரும் வானத்தைப் பார்த்துக்கொண்டு நின்றனர்.

(03) 1. குற்றத்தை மறைக்கப் பார்த்தல் 2. மேலெழுந்த வாரியாகப் படித்தல்

(04) 1. விடாமுயற்சி

(05) 1. அணிந்துரை 2. அகராதி

(06) 1. நிலையற்ற தன்மை 2. இணை பிரியாமல் இருத்தல்

(07) 1. பழக்கங்களைப் 2. இரங்கினர்


(08) 1. Bicycle 2. Banana (09) Please excuse me (10) இது யாருடைய புத்தகம்?

(11) தேநீர் குடியுங்கள் (12) கியவன்ன

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (13) 1 | (14) 3 | (15) 3 | (16) 3 | (17) 2 | (18) 1 |
| (19) 3 | (20) 3 | (21) 2 | (22) 3 | (23) 4 | (24) 2 |
| (25) 3 | (26) 3 | (27) 2 | (28) 4 | (29) 2 | (30) 3 |
| (31) 4 | (32) 4 | (33) 3 | (34) 1 | (35) 2 | (36) 2 |

(37) 4 (38) பல்லாங்குழி (39) கபடி


(40) யாப்பகுவை காவல் அரண் நுழைவாயில் (41) வட்டதாகே பொலன்னறுவை

(42)  (43)  (44) 19 (45) 8452 (46) 73km

(47) 216km (48) 104 பெட்டிகள் (49) i. 12 ii. 6

(50) 4.5cm (51) 2/8, 1/4 (52) 4m 75cm (53) i. 9 ii. 2

(54) ரூபா 126.00 (55) 26m (56) 10l 215ml

(57) 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிமையில் இன்பம்



எளிமையான வாழ்வில்தான் இன்பமயமான எதிர்காலம் அமைந்துள்ளது. ஆடம்பரமாக வாழ்வதில் எவ்வித பயனும் இல்லை. ஆடம்பரம் என்பது நம்மை ஆட வைக்கும் பம்பரம் தான். அது வெறுமனே நம்மை ஆட வைக்குமே தவிர, அதில் எவ்வித பயனும் கிடையாது. ஆடம்பரத்தின் பின்னே சென்று நினைத்த மாதிரி வாழ முற்படின், இறுதியில் எதுவுமே மீதமிருக்காது. எளிமையாக வாழ வேண்டும் என்றால் நமக்குக் கிடைக்கும் வருமானத்தை வைத்து அதற்கு ஏற்ற வகையில் சேமித்து சிக்கனமாக வாழ்வதே எளிமையான வாழ்வு என்பதாகும். அதற்காக, கருமியாகவும் வாழக்கூடாது. அத்துடன், அளவுக்கு மிஞ்சிய செலவுகளும் இறுதியில் நஷ்டத்தில் அல்லது துன்பத்தில்தான் சென்று முடியும். நாம் இடும் இன்றைய உறுதியான அத்திவாரமே நாளைய அழகிய வாழ்வாகும்.

எனவே, எளிமையாக வாழ்ந்தால் அனைத்துமே நம்முடன் இருக்கும். நாடும், பொருளும், நற்புகழும் தாமே நம்மைத் தேடி வரும். இதைவிட, இறை அருளும் கிட்டும். எம்மதமாயினும் அவை எளிமையான வாழ்க்கை முறைகளையே வலியுறுத்துகின்றன. எனவே, இன்று நாம் வாழும் வாழ்வே, நாளைய வெற்றியின் ரகசியமாகும். எளிமையாக நாம் வாழ்ந்தால் நாளைய உறுதியான வாழ்வு நம் கையில் என்பதையும் உணர வேண்டும். நாளைய வெற்றிகரமான பயணத்திற்கு இன்றே நாம் அத்திவாரமிடுவோமாக.

என்.என்.பர்ஷானா,
தரம் - 10,க/விக்னேஸ்வரா த.ம.வித்.,
பன்விலை.



## சிட்டுக்குருவி

சின்னச் சின்ன சிட்டுக்குருவி
சிறகு விரித்துப் பறக்கும் குருவி
வண்ண வண்ண சாம்பல் நிறத்தில்
வனப்பாய் வானில் பறக்கும் குருவி!

கொட்டிக் கிடக்கும் தானியத்தை
கூடி வந்து கூடி நின்று
தொட்டுத் தொட்டு கொத்தித் தின்று
கூடிப் பறந்து கூடு செல்லும்!

ஒன்றாய் வராமல் ஒன்றோடொன்று
சேர்ந்து வரும் சிட்டுக்குருவி
நன்றாய் செப்பும் பாடம் கேளீர்
கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!

ஏ.கஜன்,
கொழும்பு முகத்துவாரம்
இந்துக் கல்., கொழும்பு-15.

## வித்தியாசமான கருத்து

பிரபல ஆங்கிலேய மதகுருவான ஸ்டனி ஸ்மித் தனது நண்பரான வழக்கறிஞர் ஒருவருடன் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார். கலாநிதி ஸ்மித்தின் வாதத்திறமைக்கு ஈடுகொடுக்க முடியாது தவித்த நண்பர் இறுதியில் அவரை அவமதிக்கும் நோக்குடன், "எனக்கு ஒரு படுமுட்டாளான மகன் இருந்தால் அவனை நான் ஒரு மதகுருவாகத்தான் ஆக்கியிருப்பேன்" என்றார்.

"அந்த விடயத்தில் உங்கள் தந்தையாரின் கருத்து வித்தியாசமாக இருந்திருக்கிறது போல் தெரிகிறது" என்றார் ஸ்மித்.

என்.எப்.அய்மா,
கமு/அல்-ஸம்றா வித்., மருதமுனை.



## விடுகதைகள்

1. உடலெல்லாம் பல் உள்ளவன்; ஒரு நாளும் கடிக்க மாட்டான். அவன் யார்?
2. கேட்காமல் ஊசி போடுவான்; காசு வாங்காமல் போவான். அவன் யார்?
3. உயரமான தோட்டத்தில் ஒளிந்திருப்பான் கறுப்பன்.அவன் யார்?
4. கைக்கெட்டும் தூரத்தில் இருக்கும். நம்மால் பார்க்க முடியாது. அது என்ன?
5. தொடாமலே சிணுங்குவான்; தொட்டால் அடங்குவான். அவன் யார்?
6. நாம் தூங்கி எழுவதற்கு முன்னே வந்துவிடுவான். அவன் யார்?
7. எல்லோரையும் அழ வைப்பவன். அவன் யார்?
8. பெட்டியில் போட்டு வைத்தாலும் எப்படியோ வெளியூர் போய்ச் சேர்ந்திடுவான். அவன் யார்?

### விடைகள்

1. சீப்பு
2. நுளம்பு
3. பேன்
4. முதுகு
5. தொலைபேசி
6. நாளிதழ்
7. வெங்காயம்
8. கடிதம்

## மூன்றெழுத்து

நட்பு என்பது மூன்றெழுத்து - அதில் வரும்
பாசம் மூன்றெழுத்து
அம்மா என்பது மூன்றெழுத்து - அவர் தரும்
அன்பு மூன்றெழுத்து
கல்வி என்பது மூன்றெழுத்து - அது தரும்
அறிவு மூன்றெழுத்து
கேள்வி என்பது மூன்றெழுத்து - அதில் கிடைக்கும்
பதில் மூன்றெழுத்து
நிலம் என்பது மூன்றெழுத்து - அதில் கிடைக்கும்
பயிர் மூன்றெழுத்து

ஏ.லக்ஸன்,
தரம் - 10,
மா/பிட்டகந்த
II த.வித்.,




## தன்வினை தன்னைச் சுடும்



ஏற்றாலைக் கிராமத்தில் கந்தனும், வேலனும் ஆட்டுப்பண்ணைகள் வைத்திருந்தனர்.

ஒருமுறை வேலனின் ஆடுகள் இரண்டு காணாமல் போயின. கவலை கொண்ட வேலன் கந்தனிடம் வந்தான், . "கந்தா, எனது ஆடுகள் இரண்டு காணாமல் போய்விட்டன. உனது பண்ணையில் ஆடுகள் ஏதாவது காணாமல் போயுள்ளதா?" என்று கேட்டான்.

"இல்லை. எனது ஆடுகள் எல்லாம் சரியாக இருக்கின்றன" என்றான் கந்தன்.

இன்னுமொரு மாதம் சென்றது. வேலனின் இன்னும் மூன்று ஆடுகள் காணாமல் போயின. வேலன் மீண்டும் கந்தனிடம் விசாரித்தான். தனது ஆடுகள் எதுவும் காணாமல் போகவில்லை என்று கந்தன் கூறினான்.

அடுத்த நாளிலிருந்து வேலன் கண்விழித்து அவதானிக்கத் தொடங்கினான்.

ஒருநாள், தனது ஆடுகளில் ஒன்றை ஓநாய் ஒன்று பிடித்துச் செல்வதைக் கண்டான். ஆடுகள் காணாமல் போவதற்கு ஓநாய்தான் காரணம் என்று வேலன் ஊகித்துக் கொண்டான்.

இன்னொரு வாரத்தில் இன்னொரு ஆடு காணாமல் போனது. இதனால், வேலன் பெரும் கவலை கொண்டான். எனினும், கந்தனின் பண்ணையில் ஆடுகள் அப்படியே இருப்பதைக் கண்டு பொறாமைப்பட்டான். தனது ஆடுகள் அழிவதைப் போன்று கந்தனின் ஆடுகளும் அழிய வேண்டும் என்ற தீய எண்ணம் அவன் உள்ளத்தில் உருவாகியது.

அடுத்த நாள், அவன் நகரத்துக்குச் சென்று ஒரு போத்தல் விஷத்தை வாங்கி வந்தான். அதை உயரமான ஓர் இடத்தில் வைத்தான். "கந்தனின் ஆடுகள் நீர் அருந்தும் தொட்டியில் இன்றிரவு இதைக் கலந்துவிட வேண்டும்" என்று எண்ணினான்.

சிறிது நேரத்தில் வேலனின் மகன் பாடசாலையிலிருந்து வீடு திரும்பினான். அந்த விஷம் நிறைந்த போத்தலைக் கண்டான். நீல வர்ணத்தில் இருந்த அந்தப் போத்தல் அவனை மிகவும் கவர்ந்தது. அதைக் கரைத்து விளையாடலாம் என்ற எண்ணத்தில் ஆடுகள் நீர் அருந்தும் தொட்டியை நோக்கிச் சென்றான்.

தண்ணீர்த் தொட்டியில் ஆடுகள் நீர் அருந்திக் கொண்டிருந்தன. வேலனின் மகன் அவற்றை அவசரமாக விரட்டினான். போகும் போக்கில் ஓர் ஆடு அவனை முட்டி விட்டுச் சென்றது. இதனால், அவன் கையிலிருந்த விஷப் போத்தல் தொட்டியுள் விழுந்து உடைந்தது.

சிறிது நேரத்தில் வேலனின் ஆடுகள் மறுபடியும் வந்து நீரை அருந்தின. நேரம் செல்லச் செல்ல ஒவ்வொரு ஆடாக இறந்து விழுந்தன. அப்போது அங்கு வந்த வேலன் தனது ஆடுகள் இறந்து கிடப்பதைக் கண்டான். ஏதோ ஒரு யோசனை ஏற்படவே ஓடிச்சென்று விஷப் போத்தலைப் பார்த்தான். ஆனால், அதை அங்கு காணவில்லை! தன் மகனை விசாரித்துப் பார்த்தான். நடந்ததை அறிந்து பெருங்கவலை கொண்டான்.

'தன்வினை தன்னைச் சுடுமென்று சொல்வது சரியாகி விட்டது. வேலன் கேடு செய்ய நினைத்தான். இறுதியில் அது அவனுக்கே கேடாக முடிந்து விட்டது.

எஸ்.எம்.எஃப்.மாஹிரா, தரம் - 8, குளி/பூவல்ல மு.க.வித்., பூவல்ல, வீரபொகுண.

## சுனாமி நினைவு



புலரும் பொழுதொன்றில் புன்னகை
பூத்திருந்த பூக்களைப் பறித்துச் சென்றது.
சுனாமி என்னும் பேரலை பலரை
பலிகொண்டு சுடுகாட்டுக்கு
அனுப்பியது!

ஓடித்திரிந்தோம் அன்றைய தினம்
ஆர்ப்பரித்து வந்தது கடல்
சோலையில் இருந்தோம் நாம்
சோகமாய் மாறியது வாழ்வு!

மகிழ்வுடனே கடலை அடைந்தோம்
அதுவோ சீற்றம் கொண்டது.
நாடி வந்தது எம்மை - அதனால்
உறவுகளை இழந்து தவிக்கிறோம் இன்று!

எம்.என்.முகம்மட் இன்பாஸ்,
தரம் - 9$^{C}$, கமு/அல்-மதீனா ம.வித்., நிந்தவூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலின் அரவணைப்

கரை காணாத பரந்த கடல் அழகானது; ஆனால், ஆபத்தானது. அந்த ஆபத்தை வெற்றி கொள்வதும் கடினமானது. எனினும், அதை வெற்றி கொண்டு தம் வாழ்வை அமைப்போரும் நம்மில் உளர். அவர்கள்தான் மீனவர்கள். பழங்காலம் முதல் இன்றுவரை மீன்பிடித் தொழில் நம் நாட்டில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. நாட்டிற்கு வளமாக விளங்கும் மீன்பிடித் தொழிலைப் பற்றி நாம் அறியாத விடயங்கள் பல உள்ளன.

## ஆரம்பம்

மீன்பிடித் தொழில் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? என்பது பற்றித் தெளிவாகக் கூறமுடியாது. எனினும், மனிதன் ஆரம்பம் முதற்கொண்டே மீன்பிடிக்கப் பழகியிருந்தான். இதனை அடிப்படையாக வைத்து அதற்கு நீண்ட வரலாறு இருப்பது தெளிவாகின்றது. இத்தொழில் படிப்படியாக முன்னேற்றமடைந்தபோது, மீன்பிடித் தொழிலிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இலங்கையில் மீன்பிடித் தொழில் முதன்முதலில் நாகர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்ததென நம்பப்படுகின்றது. இவர்கள் புத்தளத்திலேயே இதனை ஆரம்பித்துள்ளனர். இக்காலப் பகுதியில் 'முக்குரு' எனும் இந்திய மக்கள் பிரிவினரும் வாழ்ந்துள்ளனர். கோட்டை யுகத்தில் இந்த இரு பிரிவினருக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன. இந்த மோதலைத் தீர்ப்பதற்கு இந்தியாவிலிருந்து ஒன்பது பிரதானிகளின் தலைமையில் படையொன்று வரவழைக்கப் பட்டது. அவர்கள் கௌரவ வம்சத்தவர் அல்லது கராவ குலத்தவர் என அறிமுகமாகினர். இவர்கள் முக்குருவர்களைத் தோற்கடித்த பின்னர், அப்பிரதே சத்தில் தமது அதிகாரத்தைச் செலுத்தினர். இதனால், பிற்காலத்தில் மீன்பிடித் தொழில் அவர்களுக்கு உரிமையானது.

## வாழ்க்கை முறை

மீனவர்களின் வாழ்க்கை பொதுவாக நிச்சயமற்றது. சமுத்தி ரத்தை வெற்றி கொள்வது போலவே தம் வாழ்க்கையையும் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகின்றது. இதனால், அவர்கள் தாம் வழிபடும் தெய்வத்தின் உதவியை வேண்டி நிற்கின்றனர். கடல் பயணத்தில் ஏற்படும் ஆபத்தி லிருந்து பாதுகாக்கப்படுவதற்கும் தமது மீன்பிடித் தொழில் சிறப்படை வதற்குமே அவர்கள் இவ்வாறு செய்கின்றனர்.

கடற் பிரயாணத்தின் முன்னர் செய்யப்படுகின்ற நேர்த்திக் கடன்கள், கடல் பிரயாணம் முடிந்து கரை திரும்பிய பின்னர் நிறைவேற்றப்ப டும். மீன்பிடித் தொழில் மந்தமான காலங்களில் கடற்கரையில் சாந்தி சடங்குகள் நிகழ்த்தியதாகவும் பழைய தகவல்களிலிருந்து தெரியவருகின் றது. இவை தவிர; படகை கடலில் விடுவதற்கு முன் தூபம் காட்டுதல், வலையைப் படகில் வைத்து ஜெபித்தல், மீன் குறைவான நாட்களில் ஆலயங்களில் நேர்த்தி வைத்தல், களப்பு மீனவர்கள் களப்புக்கு அருகில் உள்ள வழிபாட்டுத் தலங் களில் பிரார்த்தித்தல் போன்ற செயல் களிலும் மீனவர்கள் ஈடுபட்டுள்ளதா கவும் தெரிவிக்கப்படுகின்றது.

## மீன்பிடித் தொழிலின் பிரிவுகள்

மீன்பிடித் தொழிலில் இரு முக்கிய பிரிவுகள் உள்ளன. அதில் ஒன்று கடலில் மீன் பிடித்தல் மற்றையது களப்பினை மையமாகக்கொண்டு மீன் பிடித்தல்.அவ்வாறே மீன்பிடிக்கும் போது இரண்டு முறைகள் பின்பற்றப் படுகின்றன. அவை; மரபு ரீதியான முறை மற்றும் நவீன முறை.

## கடலில் மீன் பிடித்தல்

மீன்கள் அதிகமாகக் கடலிலேயே வாழ்கின்றன. மீன்களைப் பெற்றுக் கொள்ளவே மீனவர்கள் கடலுக்குச் செல்கின்றனர். ஆழ்கடலில் அல்லது கடற்கரைகளில் மீன் பிடித்தல் என்பது ஒரு சவாலாகவே இருக்கின்றது.

## களப்பில் மீன் பிடித்தல்

பெருங்கடலைப் போன்றே களப்புப் பகுதியும் மீனவர்களுக்கு வளமான பகுதியாகும். கடுங்காற்று வீசும் காலங்களில் கடலுக்குச் செல்வது சிரமமான காரியமாகும். அக்காலங் களில் மீனவர்கள் களப்பினை நோக் கிச் செல்கின்றனர். அவ்வாறே, களப்பில் மாத்திரம் மீன்பிடிக்கும் மீனவர்களும் உளர். களப்பில் மீன் பிடிக்கப் பயன்படுத்தப்படும் வலை யானது படகு வலையைவிட அளவில் குறைந்தது. இந்த வலை கைகளின் உதவியால் களப்பு நீரில் சதுரமாக விரிக்கப்படும். இக்களப்புக்களில் இருந்து இறால், நண்டு என்பனவற் றைப் பெறக்கூடியதாக இருக்கும்.

## மரபு ரீதியான முறை

நவீன தொழில்நுட்பங்கள் இல்லாத அன்றைய காலங்களில் மீன்பிடித் தொழில் சிறப்பாகவே நடைபெற்று வந்தது. எனினும், அக்காலத்தில் மீன்பிடித்தலுக்கு கையாளப்பட்ட முறைகள் ஆபத்தானவை. எனினும், அதனால் கடலுக்கு எவ்வித பாதிப்புக் களும் ஏற்படவில்லை. மீனவர்கள் கடலை நேசித்தனர். தமது தொழிலுக்குத் துணைபுரியும் கடலை மதித்தனர்.

கடினமாக இருந்தபோதிலும் பழை மையான, மரபு ரீதியான முறைகளைப் பின்பற்றியே மீன்பிடித் தொழிலை மேற்கொண்டனர். அன்றைய காலத் தில் மீன் பிடிப்பதற்கு சில சம்பிரதாய முறைகள் பின்பற்றப்பட்டன. படகில் சென்று மீன் பிடித்தல், கரைவலை வீசி மீன்பிடித்தல், களப்புகளை அண்டி மீன் பிடித்தல், தூண்டிலில் மீன் பிடித் தல் என்பன அவற்றுள் சிலவாகும். இந்த முறைகளின் மூலம் மீன்பிடிப்ப தென்பது கடினமான காரியம் என்ப தால் சிறந்த பயிற்சியும் அனுபவமும் பெற்றிருக்க வேண்டியது அவசியமா கக் கருதப்பட்டது.

## தூண்டில் மூலம் மீன் பிடித்தல்

மரபு ரீதியான மீன்பிடித்தலில் இதுவும் ஒன்று. இதன்போது வளையும் தன்மையுள்ள உறுதியான



கோல் ஒன்றைப் பயன்படுத்துவர். இதற்காக, பெரும்பாலும் 'கித்துள்' மரஓலையின் தண்டினையே பயன்படுத்துவர். இக்கோலுடன் உறுதியான இழையினைக் கட்டி அந்த இழையின் நுனியில் இரையுடன் கூடிய சிறிய கொக்கி (முள்) ஒன்றைக் கட்டி மீன் பிடிப்பர். இது ஆழமற்ற கடற் பகுதியில் மீன் பிடிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு முறையாகும்.

## போக்குவரத்து சாதனங்கள்

இது மரபு ரீதியான முறை, நவீன முறை என இரு பிரிவுகளைக் கொண் டது. மரபு ரீதியான போக்குவரத்து சாதனங்கள் இன்றையகால (நவீன) போக்குவரத்து சாதனங்களை விடச் சிறப்பானவை.

### பாய்மரப் படகு




பாய்மரத்தையும் துடுப்பையும் கொண்ட போக்குவரத்து சாதனமாகும். காற்றின் உதவியோடு பயணிக்கும். சில படகுகளில் பாய்மரத்திற்கு மேல திகமாக நான்கு துடுப்புகளும் உண்டு. பாய்மரத்தின் உதவியுடன் பயணம் செய்ய முடியாத பட்சத்தில் துடுப்புகள் உபயோகப்படுத்தப்படும். காற்றின் திசைக்கு அமைய பாய்மரத்தை ஒழுங்கு செய்து, சென்றடைய வேண் டிய இடத்தை அடையலாம். ஆழ் கடல்களுக்குச் சென்று மீன் பிடிப்ப தற்கு முற்காலத்தில் பாய்மரப் படகு களே பயன்படுத்தப்பட்டன.

### தெப்பம்



படகை ஒத்த கடல் போக்குவரத்துச் சாதனமாகும். உறுதியான நான்கு மரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப்பில் மீன்பிடித் தொழில்

குற்றிகளைக்கொண்டு இறுக்கமாகக் கட்டுவதன் மூலம் தெப்பத்தை அமைத்துக் கொள்ளலாம். சில சமயங்களில் பாய்மரத்தை உபயோகிப்பதுடன், துடுப்புக்களின் உதவியுடனும் பயணிக்கலாம். கரைக்கு அருகில் மீன் பிடிப்பதற்கு இது பயன்படுத்தப்படுகின்றது.


## மிதவை



பெரிய அளவிலான அகன்ற மரக் குற்றிகளைக் கொண்டமைந்த போக்குவரத்து சாதனமாகும். பெரும்பாலும் பெரிய வலைகளை வீசி மீன் பிடிப்பதற்கு வசதியளிக்கின்றது.

## தோணி

மரக்குற்றியைக் குடைந்து உருவாக்கும் சாதனம் தோணி (வள்ளம்) எனப்படும். மரக்குற்றியுடன் தொடர்புடையதாக குறுக்காக இரண்டு



மரக்கட்டைகளுடன் இணைத்து, மற்றுமொரு சிறிய மரக்குற்றியுடன் இது கட்டப்படுகிறது. கரைக்கு அண்மையில் மீன் பிடித்தலுக்கு உகந்தது.

## கட்டுமரம்

இது வடக்கு கடற் பகுதியில் மீன் பிடித் தொழிலில் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. பெரிய மரக்குற்றிகளைக் கொண்டு அமைக்கப்பட்டதாகும்.

## படகு

இதுவும் வட கடற் பகுதியில் சிறப்பாகப் பாவனையில் இருந்தது. வள்ளத்தைப் போன்ற அமைப்பினையுடையது. கரையை அண்மித்த பகுதிகளில் வலை வீசி மீன்பிடித்தலுக்கு உகந்தது.

## நவீன முறைகள்

தொழில்நுட்ப வளர்ச்சியானது சகல துறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அது மீன்பிடித் தொழிலிலும் மாற்றத்தை ஏற்படுத்தத் தவறவில்லை. இன்று மீன்பிடித் துறையிலும் பாரம்பரிய முறைகள் மறைந்து நவீன முறைகள் அறிமுகமாகியுள்ளன. இலங்கை மீன்பிடித் தொழிலில் நவீன முறை 1936 ஆம் ஆண்டளவிலேயே அறிமுகமானது. அதன்படி, எஞ்சின் பொருத்தப்பட்ட டீசல் படகு தான் முதன்முதலில் இலங்கைக் கடலில் பயணத்தை மேற்கொண்டது. இதனைத்தொடர்ந்து பல்வேறு மீன்பிடிப் பயண சாதனங்கள் மக்கள் மத்தியில் அறிமுகமானதை அடுத்து, அதற்கேற்ற பல்வேறு விதமான வலைகளும் பாவனைக்கு வந்தன. அவற்றில் 'நைலோன்' நூலால் பின்னப்பட்ட வலைகளே மீனவர்களால் அதிகம் விரும்பப்படுகின்றன. தவிர, ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தி அதிகளவு மீன்களை பிடிக்கவும் மீனவர்கள் முயல்கின்றனர்.

நவீன முறையிலான பெரிய ட்ரோலர்கள் நீண்ட நாட்களாக கடலில் பயணிக்கக்கூடியன. மீன்கள் பழுதடையாமல் இருக்கும் பொருட்டு அவற்றில் குளிர்சாதனப் பெட்டிகள் அல்லது அறைகள் உள்ளன. இவ்வகையான ட்ரோலர்களில் பல நாட்களுக்குத் தேவையான உணவுடன் செல்லும் மீனவர்கள், நீண்ட நாட்களின் பின்னர் ஏராளமான மீன்களுடன் கரை திரும்புகின்றனர். இம்முறையானது மீனவர்களுக்கு மிகவும் எளிதாக உள்ளது. ஆரம்ப காலத்தில் உபயோகித்த படகு அளவில் சிறியது. ஒருநாள் கடற் பயணத்திற்கு மாத்திரமே உகந்தது. மிக விரைவாகவும் தேவையான இடங்களுக்கு இலகுவாகச் செல்லக்கூடியதாக இருத்தலும் இப்படகினைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் நன்மையாகும். பிற்காலத்தில் இயந்திரம் பொருத்தப்பட்ட படகுகள் பாவனைக்கு வந்தன. இந்தப் படகுகளில் ஏற்படும் இயந்திரக் கோளாறுகளைத் தவிர, இதன் பராமரிப்பு எளிதானதாகும். அவ்வாறே மரபு ரீதியான முறையைவிடப் பாதுகாப்பானதுமாகும்.

## கடலுக்குச் செல்லும் காலம்

கடற் பயணங்கள் இரவில் நடைபெறுவதாகவே நாம் நினைக்கின்றோம். இது தவறான எண்ணமாகும். மீனவர்கள் கடலுக்குச் செல்வதற்கு இரவைப் போன்றே, காலைப்பொழுதையும் தெரிவு செய்கின்றனர். காலநிலை, வானிலை, கடலின் தன்மை, பயன்படுத்தும் படகு என்பனவற்றைக் கருத்தில்கொண்டு கடலுக்குச் செல்லும் காலம் வேறுபடுகின்றது. கரையிலிருந்து நீண்ட தூரம் செல்லும் மீனவர்கள் அநேகமாக ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. புயலில் அகப்படும் போதும், இயந்திரக் கோளாறுகளின் போதும் ஏனையோரின் உதவியை மீனவர்கள் நாட வேண்டியுள்ளனர். தற்காலத்தில் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருந்த பொழுதிலும் முன்னர் இவ்வாறான வசதிகள் இருக்கவில்லை. அப்போது மீனவர்கள் கொடியை அசைத்து உதவிகளை வேண்டினர்.

## தலைவனும் சகாக்களும்

மரபு முறையிலான மீனவர்கள் தமது பயணத்திற்கு முன்னர் ஒரு படகுக்குத் தேவையான ஆட்களை சேர்த்துக்கொள்வர். படகின் அளவிற்கு ஏற்ப ஆட்களின் எண்ணிக்கையும் வேறுபடும். அவர்கள் இருவராகவோ, ஆறு பேராகவோ அல்லது எட்டுப் பேராகவோ இருக்கலாம். அக்குழுவின் தலைவர் 'மரக்கலாஹே' எனப்பட்டார். அவர் 'மங்டியா' என்ற பெயராலும் அறிமுகமானார். இவர்தான் கடலைப் பற்றிய விடயங்களை அதிகம் அறிந்து வைத்திருப்பவராவார். கடலின் தன்மை, படகு பயணிக்க வேண்டிய விதம், திசை, மீன்கள் இருக்கும் இடம் போன்ற பல விடயங்களை அறிந்தவராக அவர் இருந்தார். அதனால், ஏனையோர் அவரது கட்டளைகளுக்குப் பணிந்து ஒன்றிணைந்து, ஒற்றுமையுடன் செயற்பட்டனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலின் அரவணைப்பில் மீன்பிடித் தொழில்

(12, 13 ஆம் பக்கங்களின் தொடர்ச்சி)

## உபகரணங்கள்

கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் அதற்கே உரித்தான உபகரணங்களைப் பயன்படுத்துகின்றனர். இவற்றில் ஏராளமானவை மரபு ரீதியான மீனவர்கள் பயன்படுத்திய உபகரணங்களாகும்.

## மீன்பிடிக் கயிறு முடிப்பு

இது படகிலேயே உள்ள ஓர் அமைப்பாகும். மீன்பிடிக் கயிறுகளை வைப்பதற்கென விசேடமாக அமைக்கப்பட்டுள்ள ஓர் இடமாகும்.

## மீன்பிடிக் கயிறு

மீன்பிடிக் கயிறு என்பது சம இடைவெளியில் பின்னிக் கட்டப்பட்டுள்ள உபகரணமாகும். மீன்கள்



அதிகமாகக் காணப்படும் கடற்பிரதேசங்களில் இதனை வீசி, பின்னர் படகுக்குள் இழுத்துக் கொள்ளப்படும். இதில் உள்ள இரையை கௌவும் போது, மீன்கள் இதில் சிக்கிக் கொள்ளும்.


## தூண்டில்

நீண்ட கம்புடன் (கோலுடன்) தக்கை இணைக்கப்பட்ட உறுதியான இழையுடன் காணப்படும். அதன் நுனியில் இரும்புக் கொக்கி இணைத்துக் கட்டப்பட்டிருக்கும்.

## விளக்கு



இது ஒருவகை விளக்காகும். இரவுவேளையில் கடலில் பிரயாணம் செய்யும்போது இதன் மூலமே வெளிச்சம் பெறப்படுகின்றது. இந்த விளக்கு கடற்காற்றிலும் அணையாது எரியும் தன்மையுடையது.




## நீர் அள்ளும் பாத்திரம்


கடல் அலைகள் காரணமாக, படகினுள் செல்லும் நீரிணை அகற்றுவதற்கு உபயோகப்படுத்தப்படும் உபகரணம் இதுவாகும்.

## மீன்பிடி வலை

வலையை வீசி மீன் பிடிப்பதானது மீன்பிடித் தொழிலின் பாரம்பரிய முறைகளில் ஒன்றாகும். பல்வேறு அளவிலான வலைகளை ஆழத்தில் இறங்கக்கூடியவாறு பாரத்தை வைத்துக் கட்டுவர். மேற்பகுதியில் பாரமில்லாத, மிதக்கும் பொருள் கட்டப்படும். மிதக்கும் பொருளைக்கொண்டு வலை இருக்கும் இடத்தை மீனவர்கள் எளிதில் கண்டறிவர்.

## கரைவலை இழுத்தல்

கரைவலை இழுப்பதை கண்டுகளிக்க பலரும் விரும்புவர். எனினும், இது மிகவும் கடினமான செயலாகும். இதன்போது, கரையிலிருந்து அரை மைல் அல்லது அதற்கும் மேலான தூரத்திற்கு வலை விரித்து அதனூடாக, ஒரு பிரதேசத்தை வளைத்து இரு முனைகளை ஒன்று சேர்த்து கரைக்கு இழுத்து வரப்படுகின்றது. இதில் மீன்கள் சேரும் இடம் 'வலை மடி' எனப்படும். வலை மடியில் மீன்கள் சேர்ந்ததும் பலர் இணைந்து வலையை கரைக்கு இழுத்து வருவர். கரைவலை மிகவும் நீளமானது. இது பல அளவுகளில் இருக்கின்றது. பிடிப்பதற்கு எதிர்பார்க்கும் மீன்களின் அளவிற்கு ஏற்ப இடைவெளி அமைக்கப்படும். பிரதேசத்திற்குப் பிரதேசம் இந்தக் கரைவலை அமைப்பு வேறுபடும். தெற்கு, வடமேற்குக் கடற்பகுதிகளில் நடுத்தர அளவிலான வலைகள் பயன்படுத்தப்படும். கிழக்குப் பகுதியில் மீன்களின் அளவினைப் பொறுத்து வீசப்படும் வலையின் அளவும் அமையும். இந்த முறையில் மீன்பிடிப்போர் பெருந் தொகையான பணத்தைச் செலவிட வேண்டியுள்ளது. இது 'முதலாளி முறை' எனக் கூறப்படுகிறது. ஒரே முறையில் ஏராளமான மீன்களை இந்த முறையின் மூலம் பிடிக்கக் கூடியதாக உள்ளது.



## இடம்பெயர்ந்து மீன்பிடித்தல்

சமுத்திரம், நேரத்திற்கு நேரம் மாற்றமடையக் கூடியது. இலங்கையிலும் இதன் தாக்கம் உள்ளது. ஒவ்வொரு பிரதேசத்திலும் கடல் மாற்றமடையும் போது, கடற்றொழில் செய்வதிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. வடமேற்கு, தெற்கு, கிழக்குக் கடற்பகுதிகளில் கடல் சீராக இல்லாத காலத்தில் வடபகுதியில் கடல் சீராக இருக்கும். அவ்வேளையில் மீனவர்கள் வடக்கு நோக்கிச் செல்வர். கடற்கரைக்கு அண்மையில் தற்காலிக குடிசைகளை அவர்கள் அமைத்துக் கொள்வர். இவ்வாறு இடம்பெயர்வதால் சமய, பண்பாட்டு, மொழி ரீதியில் பல மாற்றங்கள் ஏற்படுவதுண்டு.

## கரைக்கும் கடலுக்கும் இடையிலான தொடர்பு

கரையிலிருந்து கடலுக்குப் போனபின்னர் பரந்த சமுத்திரத்தில் மீனவர்கள் தனிமைப் படுத்தப்படுகின்றனர். கண்ணுக்கெட்டிய தூரம் வரை தென்படுவது கடல் மட்டுமேயாகும். ஆதலால் கடலுக்குச் சென்றதும் உடன் கரை திரும்புவது சிரமமாகும். எனவே, அடையாளங்களை வைத்துக்கொண்டே அவர்கள் கரையை அடைகின்றனர். மீனவர்கள் பெரும்பாலும் விண்மீன்கள், பிரகாசமான ஒளி, தூரத்தில் தெரியும் கட்டடங்கள், மலைகள் ஆகியவற்றின் மூலம் வழியைக் கண்டுபிடிக்கின்றனர். அவ்வாறே, நீண்ட காலக் கடல் பிரயாணங்களின்போது பெற்ற அனுபவங்களும் கரையை வந்தடைய அவர்களுக்குக் கைகொடுக்கின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரை ஊக்குவிக்கும் விழிப்புணர்வுச் செயலமர்வுகள்



விழிப்புணர்வுச் செயற்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு

ஒரு சமுதாயத்தில் அதன் வாழ்வியல் மாற்றத்தையும் புதுமையையும் ஏற்படுத்துவதில் 'விழிப்புணர்வு' என்ற செயற்பாடு முக்கிய பங்கை வகிக்கின்றது. இச்செயற்பாடானது அனைத்துத் துறைகளுக்கும் அவசியமானதொன்றாகும். மனிதனுக்கு மனிதன், சிந்தனைக்குச் சிந்தனை, சமூகத்திற்குச் சமூகம் பிரச்சினைகள் வேறுபட்டுச் செல்கின்றன. எப்பிரச்சினையானாலும் தைரியமாக முடிவெடுக்கும் திறனை வரவழைத்துக் கொள்வது அவசரமானதும் அவசியமானதும் ஆகும். இதற்கு உந்துசக்தியாக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அமையும் என்பதில் ஐயமில்லை. மறைந்து கிடக்கும் திறனை வெளிக்கொணர்வதற்கும் தெரிந்தும் தெரியாமலும் அசட்டையாக இருக்கும் தன்மையைப் போக்குவதற்கும் ஒவ்வொரு மனிதனிடமும் சுயநம்பிக்கையைத் தோற்றுவிப்பதற்கும் நிர்வாகக் கட்டமைப்பை ஒழுங்கமைப்பதற்கும் ஒரு சமூகத்தை ஆரோக்கியமான சமுதாயமாக மாற்றுவதற்கும் எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவு செய்வதற்கும் விழிப்புணர்வுச் செயற்பாடு வழிவகுக்கும் என



விழிப்புணர்வுச் செயற்பாட்டில் மாணவர்களுடன் வளவாளர்கள்

எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தவகையில் ஒரு பாடசாலையில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு எந்தளவிற்கு செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை அறிவது அவசியமாகும். கலைத்திட்டத்தில் உலக மயமாக்கலுக்கு ஏற்பவும் நாட்டின் அபிவிருத்திக்கேற்ற வகையிலும் காலவோட்டத்திற்கேற்பவும் மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனைத் தெளிவுபடுத்தும் வகையில் கல்வித்துறை சார்ந்தோருக்கும் பொருத்தமான வளவாளர்களால் கருத்தரங்குகள் செயல் முறை வகுப்புக்கள் கலந் துரையாடல்கள் என்பன நடத்தப்பட்டு வருகின் றன.

விழிப்புணர்வுச் செயற்பாடுகளை பெற்றோருக்கும் ஏனையவர்களுக்கும் வழங்க வேண்டியது பாடசாலை நிர்வாகத்தின் தலையாய கடமையும் கடப்பாடுமாகும். இவை உயர் நிலை, இடைநிலைப் பிரிவுகளைவிட, ஆரம்பப்பிரிவுக்கே கூடுதல் தேவையாகவுள்ளது. அத்துடன், பெற்றோரையும் புதுமைகளை அறிய வைப்பதில் கூடுதல் ஆர்வத்தை செலுத்த வைக்க வேண்டிய தேவையும் உள்ளது.

ஒவ்வொரு பெற்றோரும் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டில் உரிய தெளி வைப் பெறல் வேண்டும். தம் பிள்ளையை இன்னொரு பிள்ளையுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்து அவர்களின் அடைவையும் கருத்தையும் நேரடி அனுபவத்தின் ஊடாக அறிய வைக்க வேண்டும். இதற்கான வாய்ப்பைத் தரும் அனுபவப் பகிர்வே, பாடசாலைகளில் நடத்தப்படும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளாகும். இன்று இச்செயற்பாடுகள் பாடசாலைகளில் கல்வித்திணைக்களம், முறைசாராக் கல்விப்பிரிவு, அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பனவற்றால் மேற்கொள்ளப்படுகின்றன.

விழிப்புணர்வுச் செயற்பாடுகளில் வளவாளர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஆகியோர் பங்காளிகளாக இணைந்து கொள்கின்றனர். வளவாளர்களின் வழிகாட்டலில் ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டு அட்டையுடன் குறிப்பிட்ட நேரத்தில் ஆசிரியரின் கட்டளைக்கமைவாக, மாணவர்கள் செயற்பாட்டில் ஈடுபடுவார்கள். அதன்போது, பெற்றோர் தம் பிள்ளைகளின் அருகேயிருந்து பிள்ளைகளின் செயற்பாட்டை அவதானிப்பர். விவேகம் கூடிய பிள்ளைகள் விரைவாகச் செயற்படுவர். சில பிள்ளைகள் பயிற்சியைச் செய்ய எத்தனிப்பர். சில பிள்ளைகள் இடர்படுவார்கள். பின்னர் குழுவினர் (துறை சார்ந்தோரின்) வழிகாட்டலில் பயிற்சிகளைச் செய்து முடிப்பர். இவ்வாறான நேரடி அனுபவம் நிச்சயமாக பெற்றோரிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தும்.

இந்நிலை பிள்ளைகளின் கற்றலில் மாற்றத்தை ஏற்படுத்தும். ஆசிரியர் பெற்றோரிடையே நல்லுறவையும் ஏற்படுத்தும். ஒரு வகுப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட தரங்கள் இருக்கும்போது, அவர்களிடையே கூட்டுப் பொறுப்பை ஏற்படுத்தும். கட்டம் கட்டமாக அனைத்து வகுப்புகளுக்கும் இவ்வாறான விழிப்புணர்வை ஏற்படுத்தும்போது, பாடசாலையும் வினைத்திறன்மிக்க பாடசாலையாக மாறுவதுடன் சமூகத்தில் நன்மதிப்பையும் பெற்றுக்கொள்ளும் என்பது அனுபவம் தந்த உண்மையாகும்.

இச்செயற்பாட்டின் வெற்றியானது அநேகமாகப் பாடசாலையின் முகாமைத்துவத்திலேயே தங்கியுள்ளது.

**மு.விக்னேஸ்வரன்**



குழுச் செயற்பாட்டில் மாணவர்கள்

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3921

உ.சஞ்ஜீவ்,
தரம் - 3D,
புனித அந்தோனியார் கல்., கடுகஸ்தொட.



அங்.இல: 3922

எம்.நிஸ்னி,
தரம் - 5C,
அல்-பலாஹ் ம.வித்., கம்மல்துறை.



அங்.இல: 3923

ஜெ.அமிலேஷ்,
தரம் - 1B,
மெதடிஸ்த மத்.கல்., மட்டக்களப்பு.



அங்.இல: 3924

அ.நிருஷன்,
தரம் - 3,
கருங்கண்டல் ம.வித்., மன்னார்.



அங்.இல: 3925

எம்.மயூரன்,
தரம் - 6B,
ரணபிம ரோயல் கல்., பேராதனை.



அங்.இல: 3926

த.சபேசன்,
தரம் - 6A2,
விபுலானந்தாக் கல்., வவுனியா.



அங்.இல: 3927

எச்.இர்ஷாத்,
தரம் - 5,
அல்-ஹிரா வித்., மாஞ்சோலை.



அங்.இல: 3928

எஃப்.ஸப்ருதா,
உயர் தரம்,
அரபா தே.பாட., வெலிகம.



அங்.இல: 3929

எம்.முபஷ்ஷிர்,
தரம் - 9B,
ஹமீத் அல்-ஹுசைனி கல்.,கொழும்பு.



அங்.இல: 3930

பொ.தர்சிகா,
தரம் - 10D,
சாவகச்சேரி இந்துக் கல்., சாவகச்சேரி.



அங்.இல: 3931

எம்.அன்ஸார்,
தரம் - 9,
உலுக்காப்பள்ளம் மு.ம.வித்., புத்தளம்.



அங்.இல: 3932

ப.கீர்த்திகரன்,
தரம் - 11B,
கனகபுரம் ம.வித்., கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹொரகொடையைச் சேர்ந்த நாளிர்-றஸானா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா மஹீஸா, 21.12.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



முதுந்துவ, இப்பாகமுவையைச் சேர்ந்த ரிஸ்வான்-சாஜிதா தம்பதியரின் செல்வப் புதல்வி எஃப்.ஷிபாறா, 24.12.2010 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.




முதுந்துவ, இப்பாகமுவையைச் சேர்ந்த ரிஸ்வான்-சாஜிதா தம்பதியரின் செல்வப் புதல்வன் எம்.ரிகாஸ், 29.12.2010 இல் (இன்று) தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## ஓவியம் வரைவோம் - 31

வழங்குபவர் - ஓவியக் கலைச்சுடர் எஸ்.எல்.எம்.மஹ்றூப்

**கடந்த பாடங்களில் மலர்கள், மிருகங்கள், பறவைகள், மனிதர்கள் போன்றவற்றை பல்வேறு அமைப்புகளில் நாம் வரைந்து பழகினோம். அந்தப் பயிற்சிகளை அடிப்படையாகக்கொண்டு இனிவரும் பாடங்களூடாக ஆக்கபூர்வமான ஓவியங்களை வரையப் பழகுவோம்.**

அதற்கமைய; அலங்காரம் வரைதல், தூர தரிசனத்திற்கு ஏற்ப ஒரு பொருளை எவ்வாறு வரைவது, ஓவிய வகைகள், அலங்கார வகைகள், வர்ணங்கள், கிரபிக் முறைகள் போன்றவற்றை ஒவ்வொன்றாக விளங்கி சிறந்த ஓவியங்களை உருவாக்குவோம்.



### ஓவியம் ஒன்றை வரையும்போது இடம்பெற வேண்டிய பண்புகள்

**1. பட அமைப்பு: -** நாம் ஓவியம் வரையும் தாளின் அளவுக்கேற்ப, வரையப்படும் ஓவியம் சமபங்கீடாக அமைய வேண்டும்.

**2. சமநிலைப் பட அமைப்பு: -** குறித்த ஓவியத்தில் காட்டப்படும் உருவங்கள் நன்கு திட்டமிட்டு, தாளின் பரப்பில் சமமாக உரிய இடத்தில் தேவையானவாறு ஓர் ஒழுங்கில் பங்கிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதையே இது குறிக்கின்றது.

**3. வர்ண ஒழுங்கு: -** வர்ணங்கள் இயற்கையோடு உள்ளவாறும் நமது கற்பனைத் திறனுக்கு ஏற்ப பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும். வர்ணங்களை உரிய முறையில் சரியாக அமைத்தால், ஓவியம் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் வகையில் அமையும். எனவே, பொருத்தமான இடங்களில் பொருத்தமான வர்ணங்களைப் பாவிப்பதுடன், வர்ண உபயோகம் தாளின் அனைத்துப் பகுதியிலும் பேணப்பட்டிருக்க வேண்டும்.

**4. பின்னணி: -** ஓர் ஓவியத்தில் பிரதான இடங்களைத் தவிர, ஏனைய இடங்களைப் 'பின்னணி' என்று அழைக்கலாம். அதனை இயற்கையாக இருப்பதாகவோ அல்லது நமது கற்பனை சக்திக்கு உட்பட்டதாகவோ அமைத்து, மிகப்பொருத்தமான நிறங்களைப் பயன்படுத்தி ஓவியத்தைப் பூரணமாக்கலாம். ஓவியத்தின் பின்னணிப் பொருத்தப்பாடே, ஓவியத்தின் மதிப்பையும் அதன் உயர்வு மற்றும் தாழ்வையும் நிர்ணயிக்கும்.

(தொடரும்)

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எஸ்.சுகன்யா, தரம் - 7,
கலப்பிட்டகந்த த.ம.வித்.,
பள்ளகெட்டுவ.



எஃப்.ரிஸ்னா,
உயர் தரம், புத்தளம்.



ர.ருஷாந்,
பாலர் வகுப்பு, கரிற்றாஸ் முன்பள்ளி,
மன்னார்.



எஃப்.அஸ்னா, தரம் - 8^A,
அஸ்ஹர் கல்., அக்குறனை.



எஸ்.யுரோனிகா, தரம் - 9,
பாலர் யேசு கன்னியர் மடம்,
இரத்தினபுரி.



எம்.சஹ்லான், தரம் - 1^A,
நாச்சியாதீவு மு.ம.வித்.,
நாச்சியாதீவு.



சஹ்மினா ஆப்தீன்,
தரம் - 3^E, அல்-ஜிஃப்ரியா வித்.,
ஏறாவூர்.



பீ.தீபா, தரம் - 6^C,
அப்புத்தளை த.மத்.கல்.,
அப்புத்தளை.



எஃப்.அஸ்கா, தரம் - 7,
ஹமீதியா மு.ம.வித்., கும்பலங்க.



ஜி.அமீரா, தரம் - 9,
அரபா மு.ம.வித்., ஹந்தஸ்ஸ.



எம்.நசீர், தரம் - 11,
கொடேகொட மு.வித்.,
ஹெம்மாதகம.



வி.ரஜிகரன், தரம் - 4^B,
கோளாவில் விநாயகர் ம.வித்.,
கோளாவில்-02.

## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரியாலையூர் சி.சிவதாசன்

# ஐயர் கண்டது பேய்தானா?

பொழுது சாய்ந்து இருள் சூழ்ந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. மழை எப்பொழுதும் பெய்யலாம் என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. இடி, மின்னலின் அகோரம் வர வர அதிகரித்தது. காரிருளில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை எதுவுமே தெரியவில்லை. மழையும் மெல்ல மெல்லப் பெய்ய ஆரம்பித்தது. கரடுமுரடான அந்தப் பாதையில் மிக அவதானமாக தனது ஒற்றை மாட்டு வண்டியைச் செலுத்த ஐயரால் முடியவில்லை. திடீரென்று ஏனோ தெரியவில்லை மாடு அப்படியே அசையாமல் நின்றுவிட்டது. கையில் இருந்த கம்பினால் மாட்டின் முதுகில் மாறி மாறி அடித்தார் ஐயர். மாடு அடிதாங்க முடியாமல் முன்னோக்கி நகர்ந்து வேப்பங்கேணிப் பகுதியை அண்மித்தபோது திகைத்துப் போனார் அவர்.

சின்னக்கிளி ஐயர் இதுவரை எங்கும் கண்டிராத அதிசய நிகழ்வை அன்று அங்கு கண்டார். அது வேப்பங்கேணியிலுள்ள வேப்பமரத்தில்தான். 'காளியம்மன் சிலைக்கு மிக அருகில் நடைபெறும் அந்நிகழ்வு காளியம்மனின் செயலா? இங்கு யாரும் நடமாடாத நேரத்தில் இந்த வெளிச்சம் அதுவும் வேப்ப மரத்தில் எப்படித் தோன்றும்?' இவ்வாறு தனது உள்ளத்தில் கேள்விகள் பல எழுப்பியவாறு மேலும் முன்னோக்கி மாட்டு வண்டியை நகர்த்தினார்.



வேப்பமரத்தில் தோன்றிய அந்த வெளிச்சம் இப்பொழுது மறைந்து, மறைந்து இடையிடையே பிரகாசமாகத் தோன்றியது. அந்தக் குளிர்மையான நேரத்திலும் சின்னக்கிளி ஐயரின் உடல் வியர்த்துக் கொட்டியது. நடுக்கத்துடன் ஒருவித பயமும் அவருக்கு ஏற்பட்டது. இதனால், மாட்டு வண்டியை மேலும் செலுத்த முடியாமல் திண்டாடிக்கொண்டிருந்தார்.

வேப்ப மரத்தடியை நெருங்கிய அவர் மீண்டும் வேப்பமரத்தில் வெளிச்சமொன்று தோன்றுவதைக் கண்டார். அந்த வெளிச்சத்தில் உருவமொன்று மிகப் பயங்கரமாக மங்கலாக காற்றில் மிதந்து செல்வதைப் போல் தெரிவதையும் பார்த்தார். வெளிச்சம் அணைந்ததும் அதனைத் தொடர்ந்து பயங்கரச் சத்தமொன்று இடியோசை போல் முழங்கியது. எதற்குமே பயப்படாத சின்னக்கிளி ஐயர் துடிதுடித்துப் போனார். மாட்டு வண்டியை விட்டுக் கீழே பாய்ந்தார். அருகே சரசர என்ற சத்தங்கேட்க ஏதோ ஒன்று ஐயரை நோக்கி வருவது தெரிந்தது. மேலும், அங்கு நிற்க விரும்பாத அவர் தாமதிக்காமல் பாதையைவிட்டு வேப்பமரத்தடிக்கு எதிர்ப்பக்கமாக இருந்த வயல்வெளியினூடாக ஓடத் தொடங்கினார்.

சின்னக்கிளி ஐயர் ஓடும் ஓட்டத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் அவரின் பின்னால் மிக வேகமாக ஏதோ ஒரு மர்மமான உருவம் ஓடிவரும் சத்தம் தொடர்ந்து வருவதை உணர்ந்தார். ''ஐயோ! பேய்! பேய்! வேப்பமரத்துப் பேய்!'' என அலறியவாறே மிக வேகமாக கிராமத்தை நோக்கி ஓடலானார். ஐயர் பரக்கப் பரக்க உடலெல்லாம் வியர்க்க கிராமத்துக்குள் அலறியவாறே வருவதை உணர்ந்த கிராம மக்கள் பொல்லுகள் தடிகளுடன் வெளியே வந்து ஒன்று கூடினர். ஓடிவந்தவர் சின்னக்கிளி ஐயர் என்பதைக் கண்ட கிராமத்தவர்கள் ''என்னையா? ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள்'' என்று கேட்டார்கள். ஐயர் அச்சத்தினால் நடுநடுங்கியவாறே தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறினார். களைப்பாக இருக்கிறது. குடிப்பதற்குத் தண்ணீர் தருமாறும் கேட்டார். ஐயருக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டது. களைப்பு நீங்கப்பெற்று ஆறுதல் அடைந்த அவர் மேலும் சொல்லலானார்.


''மிகவும் பயங்கரமான சத்தம் விகாரமான உருவம். அது பேய்தான்! பேயேதான்! மரத்திலிருந்து வேகமாக கீழே இறங்கிக் காற்றில் மிதப்பது போல் எவ்வளவு வேகமாக என்னை நோக்கி வந்தது. ஐயோ! நினைக்கவே நெஞ்சம் பதறுகின்றது'' என்று அச்சத்துடன் கூறினார்.

சின்னக்கிளி ஐயரின் இந்தக் கூற்றை அங்குள்ளவர்கள் பலர் நம்பினார்கள். பேய்கள் பற்றிய நம்பிக்கை இல்லாத ஒருவன் ஐயரின் கூற்றை ஏற்க மறுத்தான். ''பொய்! முழுப்பொய்! பேயா! நம் கிராமத்திலா! ஊரவர் வேண்டுமானால் நம்பலாம். நீங்களும் நம்பலாம். நான் நம்ப மாட்டேன். இது பேயின் செயலாக இருக்க முடியாது'' என்று அடித்துக் கூறினான்.

''நம்பினால் நம்பு இல்லாவிட்டால் விடு. அதற்காக நான் கவலைப்படவில்லை. இன்றுவரை, அதுவும் சொற்ப நேரத்துக்கு முன்வரை உன்னைப்போலத்தான் நானும் இருந்தேன். ஆனால், இப்பொழுது தெளிவுடன் கூறுகிறேன். பேயென்பது உண்மைதான். இந்தக் கிராமத்திற்கு ஏதோ கேடுகாலம். இன்னும் என்னென்ன நடக்குமோ தெரியாது. இப்படியான பயங்கரத்தை நான் என்றுமே கண்டதில்லை. என் வண்டில் மாடுகூட, அந்தக் காட்சியைப் பார்த்து வெருண்டு, வெருண்டு கத்தியது'' என ஐயர் மேலும் கூறிக்கொண்டே போனார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன் கடகடவெனச் சிரித்தான். ஐயர் அவனைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய்? பேயென்றதும் உனக்கு ஏளனமாக இருக்கிறதோ?'' என ஐயர் சினத்துடன் அவனைப் பார்த்து வினவினார்.

(தொடரும்)

*வெளிச்சம் அணைந்ததும் அதனைத் தொடர்ந்து பயங்கரச் சத்தமொன்று இடியோசை போல் முழங்கியது. எதற்குமே பயப்படாத சின்னக்கிளி ஐயர் துடிதுடித்துப் போனார். மாட்டு வண்டியை விட்டுக் கீழே பாய்ந்தார். அருகே சரசர என்ற சத்தங்கேட்க ஏதோ ஒன்று அவரை நோக்கி விரைவாக வருவது தெரிந்தது*



# உண்மையான அஞ்சாமை

பாடசாலை விட்டு வீட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்த பிரகாஷ், அதை சற்றும் எதிர்பார்க்கவில்லை. திடீரென்று யாரோ அவனைத் தள்ளிவிட, முன்பக்கமாகப் போய் விழுந்தான். மறுகணம் பின்னால் 'கலகல'வென சிரிப்புச் சத்தம் கேட்டது. அங்கே அவனுடன் படிக்கும் கணேசன் நின்று கொண்டிருந்தான்.

''எதற்காக என்னைத் தள்ளிவிட்டாய்?'' என்று கேட்டான் பிரகாஷ்.

''சும்மாதான்.... ஏன் உன்னால் என்னை என்ன செய்ய முடியும் சொல் பார்ப்போம்?'' என்று திமிருடன் கேட்டான் கணேசன்.

பிரகாஷ் மட்டுமல்ல, அவனுடன் படிக்கும் ஏனைய மாணவர்களும் கணேசனுக்குப் பயந்தே இருந்தார்கள். காரணம், அவன் சற்று முரட்டுச் சுபாவம் கொண்டவன். பிறருக்கு ஏதாவது தொல்லை கொடுத்துக்கொண்டே இருப்பான்.

யாராவது அதுபற்றிக் கேட்டால், ''அஞ்சாமைதான் வீரம் என்றும் ஆசிரியர் சொல்லியிருக்கிறார் அல்லவா? நான் யாருக்கும் பயப்பட மாட்டேன்'' என்று திமிராகப் பதிலளிப்பான். கணேசனின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருந்தது. ஆனால், எந்த மாணவனுக்கும் அவனைத் தட்டிக் கேட்கும் துணிவில்லை.

மாதங்கள் கடந்தன. ஆண்டிறுதிப் பரீட்சை வந்தது. முதல்நாள், எல்லா மாணவர்களும் பரீட்சை எழுதிக் கொண்டிருந்தனர். கணேசனின் அருகில்தான் பிரகாஷ் அமர்ந்திருந்தான். பரீட்சை எழுதிக்கொண்டிருந்த கணேசனின் பேனா, திடீரென்று எழுத மறுத்தது. அவன் பேனாவை உதறிப் பார்த்தான். அப்போதும் அது எழுதவில்லை. என்ன செய்வதென்று புரியாமல் தவித்தான்.

உடனே மேற்பார்வையாளரிடம், ''சேர் என்னோட பேனா எழுத மாட்டேங்குது. வேறு யாராவது இரண்டு பேனா வைத்திருந்தால் ஒன்று வாங்கிக் கொடுங்கள்'' என்றான்.

மேற்பார்வையாளரின் கோபம், அவரது கண்களிலேயே தெரிந்தது. ''பரீட்சைக்கு வருவதற்கு முன் பேனா நன்றாக எழுதுகிறதா என்று கவனித்து எடுத்து வந்தால் என்ன? பரீட்சை என்றால் எப்போதும் இரண்டு பேனாவைக் கொண்டு வரவேண்டும் என்று உனக்குத் தெரியாதா?'' என்று கோபமாகக் கேட்டவர், ''யாரிடமாவது இரண்டு பேனா இருந்தால் இவனுக்கு ஒன்றைக் கொடுங்கள்'' என்று ஏனைய மாணவர்களைப் பார்த்துக் கூறினார். ஆனால், யாருமே பேனாவைக் கொடுக்க முன்வரவில்லை. காரணம் அனைத்து மாணவர்களும் கணேசனின் மீது வெறுப்பாகவே இருந்தனர்.

செய்வதறியாது தலைகுனிந்தவாறே நின்று கொண்டிருந்த கணேசனைப் பார்த்தான் பிரகாஷ். உடனே எழுந்து, ''சேர், என்னிடம் இரண்டு பேனா இருக்கின்றது. ஒன்றை கணேசனிடம் கொடுக்கிறேன்'' என்று தனது பேனாவில் ஒன்றை கணேசனிடம் கொடுத்தான். கணேசனும் பிரகாஷ் கொடுத்த பேனாவால் பரீட்சையை எழுதி முடித்தான்.

பரீட்சை முடிந்தது. அனைவரும் விடைத்தாள்களை மேற்பார்வையாளரிடம் கொடுத்து விட்டு வெளியே வந்தார்கள். கணேசன் பிரகாஷ் கொடுத்த பேனாவை திருப்பிக் கொடுத்துவிட்டு, ''ரொம்ப நன்றி பிரகாஷ். நான் உனக்கு எத்தனையோ தொல்லைகள் கொடுத்திருக்கிறேன். அதையெல்லாம் மறந்துவிட்டு எனக்குப் பேனாவைக் கொடுத்து உதவியதற்கு ரொம்ப நன்றி'' என்று பிரகாஷின் கைகளைப் பிடித்தவாறே கூறினான்.

அப்போது பிரகாஷ், ''கணேசா, அஞ்சாமை என்பது நம் உடல் வீரத்தைப் பொறுத்தது அல்ல. மற்றவர்கள் உன்னைத் திருப்பி அடிக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தில் மற்ற மாணவர்களை நீ துன்புறுத்துகிறாய். அதனால், உனக்கு ஓர் உதவி தேவைப்பட்டபோது, அவர்கள் உதவி செய்ய விரும்பவில்லை. அஞ்சாமை என்பது யாருக்கும் பயப்படாமல் இருப்பதல்ல. எல்லோரிடமும் அன்பாக இருப்பது. அன்பாக இருந்தால் நாம் யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. நமக்கு எத்தனை துன்பம் வந்தாலும் அனைவருமே நமக்கு உதவி செய்யத் தயாராக இருப்பார்கள். அதுதான் உண்மையான அஞ்சாமை'' என்றான் பிரகாஷ்.

''எல்லோரும் என்னை மன்னித்து விடுங்கள். உண்மையான அஞ்சாமை என்ன என்பதை பிரகாஷ் எனக்குப் புரிய வைத்துவிட்டான். இனி நான் உங்களோடு நட்பாகவும் அன்பாகவும் இருப்பேன்'' என்று மற்ற மாணவர்களிடம் மன்னிப்புக் கேட்டான் கணேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

**இன்றைய பாடத்தில் கமலுக்கும் அம்மாவுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**කමල්:** අම්මේ මම හෙට අනිල්ලගේ ගෙදර යනවා.
அம்மே மம ஹெட அனில்லகே கெதற யனவா.
கமல்: அம்மா நான் நாளைக்கு அனிலின் வீட்டுக்குப் போவேன்.



**අම්මා:** ඒ ඇයි පුතා?
ஏ எய் புதா?
அம்மா: ஏன் மகன்?

**කමල්:** අනිල් අලුත් ගෙයක් හදලා. හෙට ගෙට ගෙවදීමේ උත්සවය.
அனில் அலுத் கெயக் ஹதலா. ஹெட கெட கெவதீமே உத்சவய.
கமல்: அனில் புது வீடு ஒன்றைக் கட்டியிருக்கிறார். நாளைக்கு புதுவீடு குடிபுகும் வைபவம்.

**අම්මා:** ඇත්තද පුතා? හරි සතුටුයි.
எத்தத புதா? ஹறி சதுடுய்.
அம்மா: உண்மையா மகன்? மிக்க மகிழ்ச்சி.

**කමල්:** අනිල් හරි හොඳයි. හරි දක්ෂයි.
அனில் ஹரி ஹொந்தய். ஹரி தக்ஷய்.
கமல்: அனில் மிகவும் நல்லவர். நல்ல கெட்டிக்காரர்.

**කමල්:** එයාගේ අම්මා හරියට මහන්සි වුනා එයාට උගන්වන්න.
எயாகே அம்மா ஹரியட மஹன்சிவுனா எயாட உகன்வன்ன.
கமல்: அவருடைய அம்மா அனிலைப் படிப்பிக்க மிகவும் கஷ்டப்பட்டார்.

**අම්මා:** දැන් ඒකේ ප්‍රතිඵල තියෙනවනේ. අම්මාට හරි සතුටු ඇති.
தென் ஏகே பிரதிபல தியெனவனே. அம்மட ஹரி சதுடு எதி.
அம்மா: இப்போது அதன் பலன் கிடைத்துள்ளதுதானே. அம்மாவுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.

**අම්මා:** පුතා මොනවද හෙට එයාට දෙන්නේ?
புதா மொனவத ஹெட எயாட தென்னே?
அம்மா: மகன் நாளைக்கு அவருக்கு என்ன கொடுக்கப் போகிறீர்கள்?

**කමල්:** අද සවස සාප්පු ගිහින් බලන්න ඕනේ.
அத சவச சாப்பு கிஹின் பளன்ன ஒனே.
கமல்: இன்று பின்னேரம் கடைக்குப் போய் பார்க்க வேண்டும்.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

**உதாரணம்:** அனிலின் வீட்டுக்குப் போவேன்.
අනිල්ලගේ ගෙදර යනවා.

i. புது வீடு ஒன்றைக் கட்டியிருக்கிறார்.
........................................

ii. அம்மா அனிலைப் படிப்பிக்க மிகவும் கஷ்டப்பட்டார்.
........................................

iii. பின்னேரம் கடைக்குப் போய் பார்க்க வேண்டும்.
........................................






'**Was**' எனும் இறந்தகால துணைவினைச் சொல்லை (Past Tense Auxiliary Verb) நிகழ்கால எச்சவினைச் சொல்லுடன் (Present Participle) அதாவது 'ing' சேர்ந்த வினைச்சொல்லுடன் சேர்த்து, புதிய வாக்கியம் ஒன்றை உருவாக்க முடிகின்றது. அவ்வாக்கியம் இறந்தகால தொடர்வாக்கியம் (Past Continuous Tense) என்பதாகும்.

★ **உதாரணங்களை இங்கே அவதானிப்போம்.**

(அ) Yesterday night I was watching the television.
நேற்று இரவு நான் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு இருந்தேன்.

✱ I was watching the television.
நான் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டு இருந்தேன்.

✱ I was watching.
நான் பார்த்துக்கொண்டு இருந்தேன்.

**குறிப்பு:** மேற்படி வாக்கியத்தில் was எனும் துணைவினைச் சொல் (Auxiliary Verb) ஓர் உதவி புரியும் வினைச்சொல்லாக (Helping Verb) செயற்பட்டுள்ளது என்பதை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

(ஆ) Yesterday night he was reading a newspaper.
நேற்று இரவு அவன் ஒரு பத்திரிகையை வாசித்துக்கொண்டு இருந்தான்.

✱ He was reading a newspaper.
அவன் ஒரு பத்திரிகையை வாசித்துக்கொண்டு இருந்தான்.

✱ He was reading.
அவன் வாசித்துக்கொண்டு இருந்தான்.

(இ) Yesterday night she was writing a letter.
நேற்று இரவு அவள் ஒரு கடிதம் எழுதிக்கொண்டு இருந்தாள்.

✱ She was writing a letter.
அவள் ஒரு கடிதம் எழுதிக்கொண்டு இருந்தாள்.

✱ She was writing.
அவள் எழுதிக்கொண்டு இருந்தாள்.

(ஈ) Yesterday night it was sleeping under the table.
நேற்று இரவு அது மேசையின்கீழ் உறங்கிக்கொண்டு இருந்தது.

✱ It was sleeping under the table.
அது மேசையின்கீழ் உறங்கிக்கொண்டு இருந்தது.

✱ It was sleeping.
அது உறங்கிக்கொண்டு இருந்தது.

(உ) The dog was barking last night.
அந்த நாய் கடந்த இரவு குரைத்துக்கொண்டு இருந்தது.

✱ The dog was barking.
அந்த நாய் குரைத்துக்கொண்டு இருந்தது.

(ஊ) The bird was flying over the tall tree.
அந்தப் பறவை உயரமான மரத்தின் மேலாகப் பறந்துகொண்டு இருந்தது.

✱ The bird was flying.
அந்தப் பறவை பறந்துகொண்டு இருந்தது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "போர் பயிற்சிகளை நிறுத்த மாட்டோம்"



## தென்கொரியா

தமது போர் பயிற்சிகளை நிறுத்துமாறு சீனாவும் ரஷ்யாவும் விடுக்கின்ற வேண்டுகோளுக்கு தாம் செவி சாய்க்கப் போவதில்லை என்று தென்கொரியா தெரிவித்துள்ளது.

'யுரொங் பியொங்' என்ற தீவிற்கு அருகே போர்ப் பயிற்சிகளை தென் கொரியா மேற்கொண்டால் அது போர் மூளுவதற்கான சூழலை ஏற்படுத்திவிடும் என்று வடகொரியா பல தடவைகள் எச்சரிக்கை விடுத்துள்ளது.

"போர் பயிற்சிகளை நிறுத்தும் உத்தேசம் தமக்கு இல்லை என்றும் எந்த நாடு எதிர்த்தாலும் போர் பயிற்சிகளை



முன்னெடுப்போம்" என்றும் தென்கொரியாவின் பாதுகாப்பு அமைச்சரின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போர் பயிற்சிகளை நிறுத்துமாறு ரஷ்யாவும் சீனாவும் வேண்டுகோள் விடுத்திருந்த நிலையிலேயே தென்கொரியா தனது பதில் கருத்தை மேற்கண்டவாறு தெரிவித்திருந்தது.

கடந்த சில மாதங்களாக தென் கொரியாவிற்கும் வடகொரியாவிற்கும் இடையே பலவகைகளிலும் முறுகல் நிலை ஏற்பட்டு வந்துள்ளது. வடகொரியா அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்காக, யுரேனியத்தை பெருமளவில் களஞ்சியப்படுத்தி வருவதாக செய்திகள் வெளிவந்ததையடுத்தே, அதற்கு முகம் கொடுக்கும் வகையிலும், வடகொரியாவை எச்சரிக்கும் வகையிலும் தென்கொரியா குறிப்பிட்ட போர் பயிற்சிகளை மேற்கொண்டுள்ளது.

# வெனிசுவெலா ஜனாதிபதிக்கு புதிய அதிகாரங்கள்

வெனிசுவெலா ஜனாதிபதி ஹு்கோ சாவேஸு்க்கு அந்நாட்டின் நாடாளுமன்றம் விசேட அதிகாரங்களை வழங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வெனிசுவெலாவில் வெள்ளப்பெருக்கின் காரணமாக, ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டே அவருக்கு இந்த விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இருப்பினும், இவ்வாறு அதிகாரங்களை தனிநபர் ஒருவரிடம் வழங்குவதானது சர்வாதிகார ஆட்சிக்கே வழிசமைக்கும் என்று எதிர்த்தரப்பினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



ஜனவரி மாதம் வெனிசுவெலாவில் புதிய நாடாளுமன்றம் பதவியேற்கவுள்ள நிலையில் தனது பலத்தை அதிகரித்துக் கொள்வதற்காகவே, வெள்ள நிலைமையைத் தனக்கு சாதகமாக அவர் பயன்படுத்துவதாக விமர்சகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, புதிதாகப் பதவியேற்கவுள்ள நாடாளுமன்றத்தில் சாவேஸின் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.






## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# ரொபர்ட் முகாபே தடை விதிப்பு



தமது நாட்டிற்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ள நாடுகளுடன் தொடர்புகளைக் கொண்டுள்ளவர்களுக்கு சிம்பாப்வேயில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று சிம்பாப்வேயின் ஜனாதிபதி ரொபர்ட் முகாபே தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வேயில் நடைபெற்ற தேர்தல் மோசடியாக நடைபெற்றதாகக் கூறி அந்நாட்டிற்கு எதிராக மேற்குலக நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளமைக்கு தமது எதிர்ப்பைக் காட்டும் பொருட்டே, முகாபே இத்தீர்மானத்தை எடுத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதற்கமைய, ரியோ டின்டோ மற்றும் ரியோடி ஏ எக்ஸ் எனும் நிறுவனங்கள் இந்தத் தடைக்கு ஆளாகும் முதல் நிறுவனங்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அற்லஸ் கேள்வி - 288**

**கேள்வி:** வடகொரியா அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்காக எதனை களஞ்சியப்படுத்தி வைத்துள்ளது?

சரியான விடை..............................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 288,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 286 இன் சரியான விடை: ஐவரி கோஸ்ட்**

**பரிசு பெறுவோர்**

எஸ்.ஏ.எஸ்.ஷர்மா,
23, கில்டன் பிளேஸ்,
பம்பலப்பிட்டி, கொழும்பு-04.

ஸ்ரீதரன் சிவதர்ஷன்,
மானிப்பாய் மேற்கு, மானிப்பாய்.

எம்.அனஸ் அஹமட்,
14/01, மஹியங்கனை வீதி, பதுளை.

# தெரிந்து கொள்வோம்

✱ விண்வெளிக்கு முதன்முதலில் சென்றவர் யார்?

**யூரி ககாரின்**



✱ இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் 'பாக்கு நீரிணை' இருப்பது போல வேறு எந்த நாடுகளுக்கிடையில் 'மலாகா நீரிணை' உள்ளது?



**இந்தோனேஷியா-மலேசியா**

✱ 2010 இல் சமாதான நொபெல் பரிசு பெற்றவர் யார்?

**லியு ஜியாபோ**
**(சீன எதிர்ப்பாளரான இவர் தற்போது சீனாவில் உள்ள சிறை ஒன்றில் அடைக்கப்பட்டுள்ளார்)**



✱ இலங்கையின் பூரணமான பெயர் என்ன?

**இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசு**
**(1978 யாப்பின்படி)**

✱ 'அங்கல் ஹை' என அழைக்கப்பட்ட வியட்நாம் போருக்குத் தலைமை தாங்கி நடாத்தியவர் யார்?

**ஹொசிமின்**





✱ உலகின் முதல் பெண் பிரதமர் யார்? அவர் எந்த நாட்டவர்?

**ஸ்ரீமாவே ஆர்.டி.பண்டாரநாயக்க-இலங்கை**

✱ ஐக்கிய நாடுகள் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது. இத்தினம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

**ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 24 ஆம் திகதி (ஆரம்பம்-1945 ஒக்டோபர் 24 ஆம் திகதி)**



✱ 'ரேடார் கருவி' எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது?

**ஆகாயத்தில் விமானம் உட்பட, பிற பொருட்கள் தென்படும் திசை, தூரம் போன்றவற்றைக் காட்டுவதற்குப் பயன்படுகிறது**



✱ சீமெந்தைக் கண்டுபிடித்தவர் யார்?

**புஸ்நெல்**



✱ மனித உடலில் எத்தனை எலும்புகள் உள்ளன? **206 எலும்புகள்**



✱ இலங்கையின் தேசிய விளையாட்டு 'எல்லே' ஆக இருந்தது. இது அண்மையில் மாற்றப்பட்டது அந்த விளையாட்டின் பெயர் என்ன?

**கரப்பந்து**



✱ ஈரான் மக்கள் பிரதிநிதிகள் சபையின் பெயர் 'மஜ்லிஸ்' என்பதாகும். அதேபோல் இஸ்ரேல் நாடாளுமன்றத்தின் பெயர் என்ன?



**நெஸ்ஸட்**

**தொகுப்பு - உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டென்டுல்கரின் தொடரும் சாதனைகள்..!



இந்திய அணியின் சச்சின் டென்டுல்கர் டெஸ்ட் போட்டிகளில் 50 ஆவது சதத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இதன்படி, டெஸ்ட் போட்டிகளில் ஐம்பதாவது சதத்தைப் பெற்ற முதலாவது வீரர் என்ற சாதனையை டென்டுல்கர் நிலைநாட்டியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெறுகின்ற டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டியிலேயே அவர் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார். டென்டுல்கர் தனது முதலாவது சதத்தை 1990 ஆம் ஆண்டு இங்கிலாந்திற்கு எதிரான போட்டியில் பெற்றிருந்தார். இதுவரை 175 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள சச்சின் டென்டுல்கர் 14,500 ஓட்டங்களைக் கடந்துள்ளார். இதன்படி, டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்றவர் என்ற சாதனையையும் அவரே நிகழ்த்தியுள்ளார்.

கூடிய டெஸ்ட் சதங்களைப் பெற்றவர்களின் வரிசையில் அவுஸ்திரேலியாவின் பொன்டிங் 39 சதங்களுடன் இரண்டாவது இடத்திலும், தென் ஆபிரிக்காவின் ஜெக்கலிஸ் 37 சதங்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## அணியின்மீது பற்றுணர்வு இல்லாதோர் நீக்கப்படுவர்



-அரவிந்த டி சில்வா

பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள இலங்கை வீரர்கள் எவராவது அணி மீதான பற்றுணர்வுடன் விளையாடாவிட்டால் உடனடியாக அவர்கள் அணியிலிருந்து விலக்கப்படுவார்கள் என்று இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவின் தலைவர் அரவிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்வதாயின் ஒவ்வொரு வீரரிடமும் தமது அணி மீதான அபிமானம், பற்றுணர்வு இருந்தாலே அது சாத்தியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## "டென்டுல்கர் தொடர்ந்து விளையாட வேண்டும்"

-கபில்தேவ்



உலகக் கிண்ணப் போட்டிகளில் இந்தியா கிண்ணத்தை வென்றாலும் வெல்லாவிட்டாலும் சச்சின் டென்டுல்கர் அணியிலிருந்து ஓய்வு பெறக்கூடாது என்று இந்திய அணியின் முன்னாள் வீரரான கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

"சச்சின் ஒரு சிறந்த வீரர்,சர்வதேச மட்டத்தில் கிரிக்கெட் அபிமானிகளின் வரவேற்பைப் பெற்றவர், இந்திய வீரர்களுக்கு டென்டுல்கரின் வழிகாட்டல் இன்றியமையாததாகும். மேலும், அவர் கலந்து கொள்கின்ற போட்டிகளைப் பார்வையிடுவதற்காக அதிகளவான ரசிகர்கள் வருகை தருகின்றனர். எனவே, இம்முறை உலகக் கிண்ணத்தில் மட்டுமன்றி அதற்கு அடுத்த உலகக் கிண்ணத்திலும் அவர் கலந்துகொள்ள வேண்டும். அதற்கான தகுதி அவரிடம் உள்ளது" என்றும் கபில்தேவ் கூறியுள்ளார்.

## முதலாம் இடத்தில் ஸ்பெயின் அணி






2010 ஆம் ஆண்டிற்கான கால்பந்தாட்ட தரப்படுத்தல் வரிசையில் ஸ்பெயின் அணி முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த 18 மாதங்களில் உலக அளவில் அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டிப் பெறுபேறுகளுக்கேற்பவே, இந்த தரவரிசைப் படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, ஐரோப்பாவைச் சேர்ந்த மூன்று அணிகள் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த தரப்படுத்தலின்படி, முதலாம் இடம் ஸ்பெயின், இரண்டாம் இடம் - நெதர்லாந்து, மூன்றாம் இடம் -ஜேர்மனி, நான்காம் இடம் - பிரேசில், ஐந்தாம் இடம் - ஆர்ஜன்டீனா, ஆறாம் இடம் - இங்கிலாந்து ஆகிய அணிகள் பெற்றுள்ளதுடன், அமெரிக்கா 18 ஆவது இடத்தையும், அவுஸ்திரேலியா 26 ஆவது இடத்தையும், ரஷ்யா அணி 114 ஆவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## டெஸ்ட் ஓட்டங்களில் டிராவிட் மூன்றாமிடம்



டெஸ்ட் கிரிக்கெட் போட்டியாளர்களில் அதிக ஓட்டங்களைப் பெற்றவர்களின் வரிசையில் இந்திய துடுப்பாட்ட வீரர் ராகுல் டிராவிட் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

தென்னாபிரிக்காவுடன் அண்மையில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின்போது, டிராவிட் அதிகளவு ஓட்டங்களைப் பெற்றபோதே அவர், இதுவரை மூன்றாவது இடத்திலிருந்த மே.இ.தீவுகள் வீரர் லாராவை பின்தள்ளி மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார். தனது 148 ஆவது டெஸ்ட் போட்டியின்போதே, டிராவிட் இந்த இலக்கை அடைந்துள்ளார்.

### டெஸ்ட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்றவர்கள்

| பெயர் | நாடு | போட்டி எண்ணிக்கை | ஓட்டங்கள் |
|---|---|---|---|
| டென்டுல்கர் | இந்தியா | 175 | 14,371 |
| பொன்டிங் | அவுஸ்திரேலியா | 151 | 12,332 |
| டிராவிட் | இந்தியா | 148 | 11,957 |
| லாரா | மே.இ.தீவுகள் | 131 | 11,953 |
| ஜென்வலிஸ் | தெ.ஆபிரிக்கா | 143 | 11,174 |
| அலன் போர்டர் | அவுஸ்திரேலியா | 156 | 11,449 |
| ஸ்டீவ் வோ | அவுஸ்திரேலியா | 168 | 10,927 |
| சுனில் கவஸ்கர் | இந்தியா | 125 | 10,122 |
| மஹேல ஜயவர்தன | இலங்கை | 116 | 9,527 |
| சந்தர் போள் | மே.இ.தீவுகள் | 129 | 9,063 |

## ஒலிம்பிக் ஒற்றையரில் தங்கம் வெல்வேன்

-ஃபெடரர்




"அடுத்து வரவுள்ள ஒலிம்பிக் போட்டியில் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் தங்கத்தை வெல்வேன்" என்று சுவிட்ஸர்லாந்தின் டென்னிஸ் வீரர் ரொஜர் ஃபெடரர் தெரிவித்துள்ளார்.

இதுவரை ஒலிம்பிக் ஒற்றையர் பிரிவில் ஃபெடரர் தங்கத்தை வென்றதில்லை. இருப்பினும், 16 கிராட்ன் ஸலாம் பட்டங்களை அவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பீஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இரட்டையர் ஆட்டத்தில் ஃபெடரர் தங்கத்தை வென்றுள்ளார். இருப்பினும், ஒற்றையர் ஆட்டத்தில் தங்கம் வெல்லாதது அவருக்கு மனக்குறையாகவே இருந்து வருகின்றது.

எனவேதான், 2012 ஆம் ஆண்டில் லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் தங்கம் வெல்வேன் என்று ஃபெடரர் சூளுரைத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சந்திரனில் வெள்ளி!

அண்மைய ஆய்வுகள் மூலம் சந்திரனில் நீர் இருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பது அறியப்பட்டுள்ளமை நாம் அறிந்ததே. தற்போது சந்திரன் தொடர்பாக மற்றுமொரு அபூர்வ தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, சந்திரனில் நீர் மட்டுமன்றி; வெள்ளியும் இருப்பதாக அண்மையில் கண்டறியப்பட்டுள்ளது.

வெள்ளியுடன் மேலும் பல்வேறு கனிமங்களும் உள்ளன எனவும் குறிப்பாக, வெள்ளி மற்றும் காபன் டையொக்சைட் ஆகியவை அதிகளவில் கலவையாக இருப்பதும் தெரிய வந்துள்ளது.

இது குறித்த ஆய்வுகளில் ஈடுபடும் விஞ்ஞானி ஒருவர் கூறியதாவது; "சந்திரனில் ஓரளவு ஹைட்ரோ காபன்கள், கந்தகம், காபன் டையொக்சைட் ஆகியவை இருப்பது கடந்த ஆண்டுசந்திரனின் இருண்ட பகுதியில் செயற்கைக்கோள் ஒன்றை மோதச் செய்ததன் மூலம் தெரிய வந்துள்ளது. சந்திரனில் காணப்படும் பெரிய பள்ளங்களில் ஒன்றான கேபஸ் எனும் பள்ளத் தில் 5.6 சதவீதம் நீர் இருக்கும் என்றும், அதனை மேலும் ஆராய்ந்ததில் குறித்த பள்ளத்தில் வெள்ளியும் இருக்கும் என்றும் மதிப்பிடப்படுகின்றது" என்றார்.



இதனை அடுத்து, சந்திரனில் காணப்படும் நூறு கிலோமீற்றர் அகலமும் நான்கு கி.மீ ஆழமும் உள்ள கேபஸ் பள்ளத்தில் ரொக்கெட்டை மோத விட்டு விரிவான ஆய்வினை மேற்கொள்ள நாஸா நிறுவனம் தீர்மானித்துள்ளது. இதற்காக, 585 கிலோ எடையில் ரொக்கெட் ஒன்று தற்போது தயாரிக்கப்படுகின்றது.

## நமது சூரியன் பற்றி சுருக்கமாக....



பூமியைப் பொறுத்தவரையில் சூரியனின் சக்தி மிக முக்கியமானதாகும். உலகின் மிக முக்கியமான ரசாயனத் தாக்கமாகிய ஒளிச்சேர்க்கைக்கு சூரிய சக்தியே மிகவும் அவசியமானது. பக்றீரியா, பாசிகள், தாவரங்கள் போன்றவை சூரிய ஒளியைக்கொண்டே காபன் டயொக்ஸைடையும் நீரையும் ஒக்ஸிஜனாகவும் உணவாகவும் மாற்றிக்கொள்கின்றன. இந்தத் தாக்கத்தை நம்பித்தான் உலக உணவுச் சங்கிலியும் காலநிலையும் இயங்குகின்றன.

* சூரியன் பூமியிலிருந்து சுமார் 14,95,97,900 கிலோமீற்றர் தொலைவில் இருக்கின்றது.
* சூரியன் தன்னைத்தானே சுற்றிவர ஏறத்தாழ 25 புவித்தினங்கள் எடுக்கின்றன.
* அதன் விட்டம் சுமார் 13,91,000 கிலோமீற்றர். இது பூமியின் விட்டத்தைப் போல் 109 மடங்காகும். இதன்படி, சூரியன் பூமியின் எடையைவிட 3,32,900 மடங்கு பெரியது.
* சூரியனில் 74% ஹைட்ரஜனும் 25% ஹீலியமும் இருக்கின்றன.
* சூரியனின் நடுப்பகுதியில் சுமார் 1,500,000°C வெப்பநிலை நிலவுவதாகக் கூறப்படுகின்றது. அதன் மேற்பரப்பு வெப்பநிலை சுமார் 6000°C. கரும்புள்ளிகள் இருக்கும் பகுதியில் மட்டும் வெப்பநிலை குறைந்து 4000°C ஆக இருக்கும்.

# பெரிய-பழைமையான நட்சத்திரக் கூட்டங்கள்



சுமார் 10 மடங்களவு பெரிதானதும் 1200 கோடி வயதானதுமான நட்சத்திரக் கூட்டங்களை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்காவின் மசாசுசட்ஸ் மாநிலத்தில் உள்ள டஃப்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் குழுவினர் விண்வெளி ஆய்வுகளில் தீவிரமாக ஈடுபட்டிருந்தபோதே, மேற்படி மிகப் பழைமையான அளவில் பெரியதான நட்சத்திரக் கூட்டங்களைக் கண்டுபிடித்துள்ளனர்.

இது குறித்து டெஃப்ஸ் பல்கலைக்கழகத் தலைமை ஆராய்ச்சியாளர் டேனிலோ மார்செசினி கூறியதாவது, "நமது பால்வீதி தோன்றியபோது மேலும் பல நட்சத்திரக் கூட்டங்கள் விண்வெளியில் இருந்துள்ளன. எனினும், அப்போது அவை நமது கண்களுக்கு எட்டவில்லை. அவற்றைக் கண்டறிவதற்கான தொழில்நுட்ப வசதிகளும் அன்றிருக்கவில்லை.



நமது பால் வீதியில் இருந்து வெகு தொலைவில் ஏராளமான நட்சத்திரக் கூட்டங்கள் மிகவும் பிரமாண்டமான அளவில் இருக்கின்றன. இவை சுமார் 1200 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உருவானவையாக இருக்கலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன், நமது பால் வீதியைவிட, இவை 5 முதல் 10 மடங்கு பெரிதாக இருக்கும் என்றும் கருதப்படுகின்றது. இதில் உள்ள நட்சத்திரங்கள் பல மடங்கு பிரகாசமாகவும் உள்ளன. இது குறித்து தொடர்ந்து ஆய்வுகள் நடந்து வருகின்றன" என்று தெரிவித்துள்ளார்.




# விண்வெளி வீரர்களுக்கான புதிய உணவுப் பட்டியல்

விண்வெளி ஆய்வுகளுக்காக சர்வதேச விண்வெளி மையத்திற்குச் செல்லும் விண்வெளி வீரர்களின் எண்ணிக்கை உயர்ந்து செல்வது போன்று, அவர்களுக்கான உணவுப் பட்டியலிலும் ஏராளமான உணவு வகைகள் இடம்பிடித்து விட்டன. விண்வெளி ஆராய்ச்சிகளில் அமெரிக்க,ரஷ்ய, ஜப்பான் விண்வெளி வீரர்கள் அதிகம் ஈடுபடுவதனால், இந்த மூன்று நாடுகளைச் சேர்ந்த சுமார் 300 வகையான உணவுப் பொருட்களே அந்த உணவுப் பட்டியலில் தற்போது புதிதாக இடம் பிடித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.



சர்வதேச விண்வெளி ஆராய்ச்சியாளர்களுக்கு உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள விக்கி லோரிஸ் என்பவர் இதுபற்றிக் கூறும்போது; "விண்வெளி வீரர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைத் தயாரிப்பதானது, செலவு கூடிய காரியம். வளி, புவியீர்ப்பு விசை இல்லாத இடத்தில் விண்வெளி வீரர்கள் உட்கொள்வதற்கு ஏற்றவகையில் அந்த உணவுகள் தயாரிக்கப்படல் வேண்டும். இவர்களின் உணவினைப் பொறுத்த வரையில், அவற்றை சுவைக்காக சாப்பிட முடியாது;





பசிக்காக மட்டுமே சாப்பிட முடியும்" என்றார்.

விண்வெளிக்கு எடுத்துச் செல்லப்படும் உணவுகள் ஈரப்பதம், பக்றீரியாக்கள் இல்லாத அதிகம் குளிரூட்டப்பட்ட அல்லது சூடேற்றப்பட்ட-பதப்படுத்தப்பட்டு பெக்கட்கள் மற்றும் டின்களில் அடைக்கப்பட்டிருக்கும். குளிர்பானங்கள் தூளாகவே இருக்கும். அத்துடன், அந்த உணவுகள் நறுமணம் அற்றதாக-ஆனால், அத்தியாவசிய சத்துக்களைக் கொண்டவையாகவே இருக்கும். பெரும்பாலான உணவுகள் தூள் மற்றும் கணதூர வடிவில் பதப்படுத்தப்பட்ட நிலையிலேயே தயாரிக்கப்படுகின்றன. சுடுநீர் சேர்த்துத் தான் இவற்றைச் சாப்பிட வேண்டும். பாண், பிஸ்கட், பழங்கள் மாத்திரமே அப்படியே வழங்கப்படுகின்றன. விண்வெளிக்குச் செல்லும் வீரர்கள் முன்கூட்டியே தமக்கு விருப்பமான உணவைத் தெரிவித்து, அதைப் பதப்படுத்தி எடுத்துச் செல்வார்கள். தவிர, ஒவ்வொரு முறையும் அமெரிக்க, ரஷ்ய விண்கலங்கள் சர்வதேச விண்வெளி மையத்துக்குச் செல்லும்போதும் விண்வெளி வீரர்களுக்குத் தேவையான உணவுகளையும் எடுத்துச் செல்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தயாரிப்பு - நுஸ்பா கெனஸ்


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.01.05ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 293**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## ஆறு வித்தியாசங்களை அடையாளப்படுத்துக — 2



## சரியான எண்ணிக்கையில் √ இடுக — 1




## பொருத்தமான சொற்களைக்கொண்டு குறள்களைப் பூர்த்தி செய்க — 4

1. நகைஈகை ................................ இகழாமை நான்கும் வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.
   (இன்னார்/இன்சொல்/வன்சொல்)
2. எண்என்ப ஏனை எழுத்துஎன்ப ................................ கண்என்ப வாழும் உயிர்க்கு.
   (இவ்விரண்டும்/சொல்லிரண்டும்/இரண்டும்)
3. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் ................................ இலாத சொலல்.
   (பொய்மை/தீமை/நன்மை)

## இணைக்க — 3

Present
Snowman
Ornament
Stocking
Christmas Tree
Santa
Reindeer



## குழம்பியுள்ள எழுத்துக்களை ஒழுங்கமைத்து சரியான சொல்லை எழுதுக — 5

1. ய்/மை/சே - ................................
2. க/ளை/ட்/ட - ................................
3. d/c/n/a/e/l - ................................
4. மா/ன/சி/ச/ம்/ம் - ................................
5. h/b/r/a/o/u/r - ................................

## அற்லஸ் அறிவுக்கு விருந்து -290 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
சு.சகிலால்குமார், இராமகிருஷ்ண வீதி, பாண்டிருப்பு-01.

**போட்டி: 02**
பஸ்ரினா பாரூக், 15B, 'க்றஸன்ட்', கொடபிடிய.

**போட்டி: 03**
ஏ.எம்.அஸ்கி, 265/C, புதிய சந்தை வீதி, சாய்ந்தமருது-07.

**போட்டி: 04**
எம்.நஷீஃப், 458/1, ஹிஜ்ரா மாவத்தை, திஹாரி.

**போட்டி: 05**
நகோமி குருஸ், 67, கடல்முக வீதி, திருகோணமலை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- என்.ஜெட் ஜனனி, புத்தளம்.
- சி.எல்றோய், வவுனியா.
- கே.லக்சிகா, உன்னஸ்கிரிய.
- வி.சஜித், கல்முனை.
- ஆர்.எம்.முஸ்னா, நாவலப்பிட்டி.
- ஏ.சரத்குமார், தலவாக்கலை.
- என்.எஃப்.சஹானாஸ், மாத்தளை.
- ஏ.கிருஷாதரன், இறத்தோட்டை.
- ஜே.ரிசானா, கனுல்வெல.
- எஸ்.அர்ஜுனன்,கொழும்பு-05.

## அறிவுக்கு விருந்து - 290 விடைகள்

**போட்டி: 01**
1. அரசன் இல்லாத நாடு அச்சில்லாத தேர்.
2. கடவுளை நம்பினோர் கைவிடப் படார்.
3. சொல்கிறவனுக்கு வாய்ச்சொல் செய்கிறவனுக்கு தலைச்சுமை.
4. எரிகிறதைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்கும்.

**போட்டி: 02**

| | | |
|---|---|---|
| 1. ஐயம் | 2. ஒநாய் | 3. கடல் |
| 4. தம்பி | 5. தவம் | 6. மகுடம் |
| 1. angel | 2. cost | 3. elephant |
| 4. new | 5. super | 6. tree |

**போட்டி: 04**



**போட்டி: 05**




## விஜய் வாசகர் மடல்




'அண்மைக்காலத்தில் உலகின் சிறந்த படைப்புகள் சில...' என்ற ஆக்கத்தை வாசித்து ரொக்கெட் வரலாறு பற்றி அறிந்துகொண்டேன். 'இலங்கையின் மேலதிக பயிர்ச்செய்கைகள்' எனும் ஆக்கம் நாம் அறியாத பல மேலதிக தகவல்களையும் தாங்கி வந்திருந்தது. 'மனிதரை வேட்டையாடும் மீன்' சுவாரஸ்யமாக இருந்தது. 'யோகாசனம்' பகுதியூடாகத் தெளிவினைப் பெற்றேன்.

**-தி.வேணுராஜ், தரம்-10^, விக்டோரியாக் கல்., சுழிபுரம்.**

'இலங்கையின் மேலதிக பயிர்ச் செய்கைகள்', 'அண்மைக் காலத்தில் உலகின் சிறந்த படைப்புகள்', 'மனிதனை வேட்டையாடும் மீன்' போன்ற ஆக்கங்கள் கற்றலுக்கு உகந்ததாகவும் இலகுவாகவும் அமையப் பெற்றிருந்தன. நீ வாரம்தோறும் சுமந்து வரும் 'விண்வெளித் தகவல்கள்', 'வாரம் ஒரு நாடு' போன்ற பகுதிகள் கடந்த ஆண்டிறுதிப் பரீட்சையை வெற்றிகொள்ள எனக்கு உதவியாக இருந்தன.

**-தி.மித்திரன், சில்லாலை மேற்கு, பண்டத்தரிப்பு.**

'கண் தானமளிப்பு தினம்' சிறப்புக் கட்டுரை உண்மையிலேயே சிறப்பாக இருந்தது. கண் தானமளிப்புக்கு முன்னோடியாகத் திகழ்ந்த வைத்தியர் ஹட்சன் சில்வாவின் பொறுமை, நம்பிக்கை, முயற்சி என்பன எமக்கு சிறந்த எடுத்துக்காட்டு. ஏனைய ஆக்கங்கள் விதவிதமான அறிவுத் தகவல்களைத் தாங்கி வந்திருந்தன.

**-கெலிஸ்ற்றா எட்மன்ட், போருதொட்ட, கொச்சிக்கடை.**

'கடல் தாமரை' எனும் தகவலை விரும்பிப் படித்தேன். 'அண்மைக்காலத் தில் சிறந்த படைப்புகள்' பட்டியல் வியக்க வைத்தது. மறுபக்கத்தில் 'இலங்கையில் 'ரொபோ' தயாரிப்புப் போட்டி' பற்றியும் வாசித்தேன். தொழில்நுட்ப வளர்ச்சி பற்றியும் மனித அறிவு வளர்ச்சி பற்றியும் கண்டு வியந்து போனேன்.

**-அமீரா சலாஹுதீன், கஹடோவிட, வெயன்கொட.**




'வேப்பமரத்தடிப் பேய்', 'மாண வர்களுக்கான குழு வழிகாட்டல்கள்', 'வாரம் ஒரு நாடு', 'விண்வெளித் தகவல்கள்' போன்ற பல்வேறுபட்ட தகவல்களை சுமந்து வந்து எங்களை மகிழ்விக்கும் விஜய்யே! நீ மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

**எஸ்.றவின்தருஷன், நு/வ.ம.த.வித்., வலப்பனை.**

நீ தாங்கி வருகின்ற 'வேப்பமரத் தடிப் பேய்' எனும் தொடர்கதை மிகவும் சிறப்பாக உள்ளது. 'அண் மைக்காலத்தில் உலகின் மிகச் சிறந்த படைப்புகள் சில' எனும் ஆக்கம் பொது அறிவை வளர்க்கக்கூடியது. 'இலங்கையில் நடைபெறும் மேலதிக பயிர்ச்செய்கைகள்' எனும் கட்டுரை எனக்கு மிகவும் பயனளித்தது.

**-ஹாஷிர் மஹ்ரூஃப், அஸ்-ஸிராஜ் ஆ.வித்., கெலிஓயா.**

தொடர்ச்சியாக சாதனைகள் பல புரியும் விஜய் இதழே! 'இலங்கையில் மேலதிக பயிர்ச்செய்கைகள்', 'கண் தானமளிப்பு சிறப்பு தினம்', உட்பட, பல்வேறு ஆக்கங்களை பயன்கொழிக்க ஏந்தி வந்தாய். உன் புகழ் உலகெங்கிலும் பரவ வாழ்த்துக்கள்!

**-த.துஷாந்தன், மாளிகாவத்தை.**

'ஒல்லாந்தர்' எனும் தலைப்பின்கீழ் வெளிவரும் வரலாற்றுக் கதைகளை ஆவலுடன் வாசித்து வருகின்றேன். 'வாரம் ஒரு நாடு' எனும் தலைப்பில் செம்பியா எனும் நாட்டைப் பற்றி அறிந்தேன். காதுகள் சத்தங்களை உணர்வது எப்படி? என்பதை மிகச் சிறப்பாக விளக்கினாய். மாணவர்களுக் குப் பயன்படும் வகையில் 'யோகாசனம்' கற்றுத் தருகின்றாய். இன்னும் எத்தனை எத்தனை தகவல்கள்தான் உன்னில்! அனைத்தும் பாராட்டக் கூடியவையே!

**-ஸஜீத் அஹமட், பிரதான வீதி, அட்டாளைச்சேனை-14.**

2010 இல் பன்னிரெண்டு மாதங்களும் 'விஜய்' இதழ்களை விரும்பிப் படித்த நாட்களை நினைக்கும்போது இனிக்கின்றது. உன்னால் என் வாழ்வு சிறக்கின்றது. எதிர்வரும் புத்தாண்டில் பல புதிய விடயங்களுடன் உன் வரவை எதிர்பார்த்திருக்கின்றேன்.

**-ஜே.எஃப்.ஸிபானியா, ஹைறாத் பிளேஸ், உடதலவின்ன.**

**இந்த இதழில் (29.12.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**
**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 05.01.2011.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**  வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு. 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1843 இல் ஹென்றி கோல் வர்த்தக ரீதியில் அறிமுகப்படுத்திய முதலாவது கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்

# 'முதலாவது வாழ்த்து மடல்

இது பண்டிகைக் காலம், நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் என்று பல பண்டிகைகளை மக்கள் கொண்டாடி மகிழ்ந்து வருகின்றனர். இந்தப் பண்டிகைக் காலத்தில் வாழ்த்து மடல்கள் பரவலாகப் பரிமாறிக்கொள்ளப்படுகின்றன. வாழ்த்து மடல்களைப் பெறும்போது, ஏற்படும் மகிழ்ச்சி எத்தகையதென்பதை அறிவோம். இப்படியொரு மகிழ்ச்சியை அனுபவிப்பதற்குக் காரணமாக இருந்தவர் யார் என்று தெரியுமா?

அதாவது வாழ்த்து மடல் பரிமாறிக்கொள்ளும் பழக்கத்தை முதன்முதலாகத் தோற்றுவித்தவர். லண்டனில் உள்ள விக்டோரியா மற்றும் அல்பர்ட் அருங்காட்சியகத்தின் முதல் இயக்குனரான சேர் ஹென்றிகோல் என்பவரே அவர். இவர் 1843 ஆம் ஆண்டு பிரபல ஓவியரான ஜோன் கோல் கொட் ஹோர்ஸ்லி என்பவரிடம் ஒரு வாழ்த்து அட்டையை வடிவமைக்குமாறு கூறினார். அந்த வாழ்த்து அட்டையில் 'மகிழ்ச்சிமிகு கிறிஸ்மஸ், புத்தாண்டு வாழ்த்துக்கள்' என்னும் வாசகமும் இடம்பெற்றிருந்தது. இதைத் தொடர்ந்து 1950 களில் வாழ்த்து மடல்கள் பல்வேறு வடிவங்களில் உலகெங்கும் பரிணமிக்கத் தொடங்கின. தற்போது, வாழ்த்து மடல்கள் இனிய இசை வழங்கும் இலத்திரனியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியில் பல்வேறு விதங்களில் தயாரிக்கப்படுகின்றன.




# மனித தேவைகளுக்காக உயிர் இழக்கும் திமிங்கிலங்கள்



திமிங்கிலம் உலகில் மிகப் பெரிய நீர்வாழ் உயிரினமாகும். எனினும், இன்று அவை பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருகின்றன. மனிதர்களினாலேயே இந்த உயிர் அச்சுறுத்தலை அவை எதிர்நோக்கி வருகின்றன. இரக்கமின்றி திமிங்கிலங்கள் மனிதர்களினால் வேட்டையாடப்படுகின்றன. இதனால், எதிர்காலத்தில் திமிங்கிலங்கள் முற்றாக அழிந்து போகக் கூடிய ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளது.

பண்டைய காலம் தொட்டு மனிதர்கள் திமிங்கிலங்களை வேட்டையாடியே வருகின்றனர். 11 ஆம் நூற்றாண்டில் 'பாசக்க' எனும் பழங்குடியினர் 'பிஸ்கே' வளைகுடாவின் அருகில் திமிங்கிலங்களை வேட்டையாடியுள்ளனர்.





திமிங்கிலங்கள் அதிகளவு உணவை உட்கொள்சின்றன. இதனால், இக்காலப்பகுதியில் பிடிக்கப்படும் திமிங்கிலங்களிடம் இருந்து அதிகளவு எண்ணெயைப் பெறுவதற்காக இவை

எனினும், தற்போது இவற்றில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய்க்காகவே இவை கொல்லப்பட்டு வருகின்றன. Baleen, Blue, Fin, Humpback மற்றும் Sei ஆகிய இனங்களைச் சேர்ந்த திமிங்கிலங்களே அதிகமாகக் கொல்லப்படுகின்றன. 'ஸ்பர்ட்' திமிங்கிலங்களிடம் இருந்து பெறப்படும் எண்ணெய் Sperm Oil எனப்படுகின்றது. வசந்த காலத்திலும் குளிர் காலத்திலும் பாரியளவில் மனிதர்களினால் வேட்டையாடப்படுகின்றன.

நீலத் திமிங்கிலங்களிடம் இருந்து 19,080 லீற்றர் எண்ணெய்யும் 'ஸ்பர்ம்' திமிங்கிலங்களிடம் இருந்து 7,950 லீற்றர் எண்ணெயும் பெறப்படுகின்றன. அந்தவகையில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து மேற்கொள்ளப்படும் அனைத்து செயற்பாடுகளுக்கும் திமிங்கில எண்ணெயே பயன்படுத்தப்படுகின்றது. இது உலோகத்தைப் பதப்படுத்தும் திரவியமாகவும் விளங்குகிறது.

திமிங்கிலங்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதனால் அதனைக் கட்டுப்படுத்தும்முகமாக 1946 இல் International Whaling Commission ஆரம்பிக்கப்பட்டது. எனினும், இதனால் வெற்றிகரமாக இயங்க முடியவில்லை. தற்போதும் பாரியளவில் திமிங்கில வேட்டைகள் தொடர்ந்தபடியே இருக்கின்றன. இவற்றைப் பாதுகாக்க பல அமைப்புகள் முன்வந்தபோதிலும் இப்பொழுது நீலத் திமிங்கிலம், வெள்ளை மற்றும் சாம்பல் நிறத் திமிங்கிலங்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன.

(இ)

# உலகின் சுப்பர் கணினி

உலகின் பிரபலம் வாய்ந்த கணினியின் உரிமையாளர் என்ற பெருமையை சீனா பெற்றுள்ளது. இதுவரை இப்பெருமை அமெரிக்காவையே சார்ந்திருந்தது. எனினும், அமெரிக்காவின் இப்பெருமையை வீழ்த்துவதில் சீனா வெற்றி பெற்றுள்ளது. இச்செய்தி அண்மையில் இணையத்தளச் செய்திகளில் வெளியாகியிருந்தது. இந்தப் பிரபல கணினியை சீனா, Ftranihe-14 என்ற பெயரில் அழைக்கின்றது. இப்பொழுது இருக்கும் கணினிகளைவிட, இது 90 மடங்கு சக்தி வாய்ந்தது.



இந்தக் கணினியின் செயற்பாட்டளவு செக்கன் அலகுக்கு கணக்கீடு 2,500 மில்லியனாகும். இதற்கான 'கிராபிக்' தயாரிப்பு களஞ்சிய கொள்ளளவு 7,000 ஆகும். இதனைத் தவிர, இன்டெல் சிப் 14,000 உட்செலுத்திக் கொள்ளக்கூடியதென வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இக்கணினியை சந்தையில் அறிமுகப்படுத்த சீன நிபுணர்கள் தயாராகி வருகின்றனர்.

(இ)

# யோகாசனம் பயில்வோம் 6



தனுராசனம்

சமஸ்கிருதத்தில் தனு என்பது வில் என்பதாகும்.

விரிப்பில் குப்புறப்படுத்து, கைகளால் கால்களை இறுகப்பிடித்து இழுத்துப் படத்தில் காட்டப்பட்டதுபோல் செய்ய வேண்டும். வில்போல் வளைக்கப்படுவதனால் தனுராசனம் என பெயர் வைத்திருக்கிறார்கள்.

**பயன்கள்**

முதுகெலும்பு வழியாக ஓடும் அத்தனை நாடி நரம்புகளும் புது இரத்தம் கிடைப்பதனால் உறுதியடைகின்றன. அஜீரணம், வயிற்று வலி, வாய் நாற்றம், தொந்தி, வயிற்றுக் கொழுப்பு, மூல வியாதி என்பன நீங்கும். கணையம், ஆண்-பெண் உறுப்புக்கள், கர்ப்பப் பை என்பன பலம் பெறும். இளமைப் பொலிவுண்டாகும். பெண்களின் கர்ப்ப சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாவனையாளர் இருக்கும் இடத்தை உணர்த்தும் புதுவகை 'நெட்வேர்க்'




ஃபேஸ் புக், டுவிட்டர், மைஸ்பேஸ் ஆகிய வற்றினூடே நண்பர்களைத் தொடர்புகொள்ளும்போது, அவர்கள் எங்கே உள்ளனர், எப்படி உள்ளனர்? என்ன செய்து கொண்டிருக்கின்றனர் என்பதை அறியக்கூடிய வசதியை வழங்கும் புதிய சேவையொன்று அறிமுகமாகிய குறுகிய காலத்திற்குள்ளேயே, ஏராளமான பாவனையாளர்கள் அதனைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

foursquare என்ற புதிய 'சோஷல் நெட்வேர்க்கிங்' சேவையே இதனை அறிமுகப்படுத்தியுள்ளது. நவீன் செல்வதுரை, டெனிஸ் கிரவ்லி

**2011 ஆம் வருடத்தின் தொழில்நுட்பப் புரட்சிக்கான முன்னோடி சேவையாகவும் தெரிவு**

என்ற இருவர் இணைந்தே இந்தப் புதிய தொழில்நுட்பத்தைக் கண்டு பிடித்துள்ளனர்.

இது தொடர்பான தகவல்கள் எவ்வாறு கூடிய பிரபல்யத்தைப் பெற்றதென்றால், அண்மையில் நடைபெற்ற உலக வர்த்தக சம்மேளன மாநாட்டில் 2011 ஆம் ஆண்டில் தொழில்நுட்பப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான முன்னோடிகளாக இருக்கப் போகின்ற நடப்புக்கால சாதனைகளின் பட்டியல் வெளியிடப்பட்டிருந்தமையே ஆகும்.

இந்தப் பட்டியலில் முன்குறிப்பிட்ட www.foursquare.com நெட்வேர்க்கிங் சேவையும் இடம்பெற்றிருந்ததையடுத்தே, மிகவும் பேசப்படும் ஒரு சேவையாக இது மாறியது.




இதன் பயன்பாடு எவ்வாறு அமையுமென்றால் ஃபேஸ்புக், டுவிட்டர், மைஸ்பேஸ் பாவனையாளர்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பில் இருக்கும் போது, அவரவர் இருக்கின்ற இடங்கள் வரை படத்தினூடாகவே, (Cocation Based) சோஷல் நெட்வேர்க்கிங் இணையத்தளங்களின் மூலமே கண்டுகொள்ளலாம்.

இத்தகைய சிறப்புக்களை இது கொண்டுள்ளமையால் இந்த நெட்வேர்க் சேவை உலகம் பூராகவும் கூடிய வரவேற்பைப் பெற்றுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் வரையில் foursquare சேவையில் தொடர்பை ஏற்படுத்தியவர்களின் எண்ணிக்கை பல லட்சங்களைத் தாண்டியிருந்தது. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த சேவைக்கு ஒன்றரை வருடங்களே ஆகியுள்ள இந்தக் குறுகிய காலத்தில் இத்தனை பாவனையாளர்கள் சேர்ந்துள்ளமை சிறப்பம்சமாகவே கருதப்படுகின்றது. தற்போது இந்த எண்ணிக்கையானது மாதாந்தம் பத்து லட்சமாக அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்றி, 2010 ஆம் ஆண்டில் வேறு எந்தவொரு சேவைக்கும் கிடைக்காத அளவில் அதிகமான விருதுகளையும் இந்த foursquare சேவை பெற்றுள்ளமையும் சிறப்பம்சமாகும். வருடத்தின் சிறந்த 'வெப் எப்ளிகேஷன்' என்ற விருதும் 'வெப்' விருதும் (Weby Award 2010) இதில் குறிப்பிடத்தக்கன. தற்போது இந்த இணைய சேவை நிறுவனத்தில் நாற்பது பேர் கடமையாற்றுகின்றனர். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தளத்தைக் கொண்டுள்ள இந்த நிறுவனம் 2010 ஆம் ஆண்டின் சிறந்த நிறுவனங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தனை வரவேற்பை பெற்றுள்ள இந்த நிறுவனத்தின் ஒரு வருட வருமானம் எவ்வளவு தெரியுமா? 8 கோடி டொலர்களாகும். (80 மில்லியன்) இதன் காரணமாக, அமெரிக்காவின் இளம் கோடீஸ்வரர்களின் பட்டியலிலும் நவீன் செல்வதுரையும் டெனிஸ் கிரவ்லியும் இடம்பெற்றுள்ளனர். 'ஃபேஸ் புக்', 'டுவிட்டர்', 'மைஸ்பேஸ்' பாவனையின்போது, தொடர்பில் உள்ளவர்கள் எங்குள்ளனர் என்ற விபரத்தை அறியக்கூடிய வசதி இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளமையால் எதிர்காலத்தில் இதனை அடியொட்டி மேலும் மாற்றமான புதிய அறிமுகங்களும் ஏற்படுத்தப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday December 29, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org